Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 17 புதன்கிழமை (30-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:155

பதில் கடிதம் நேற்று அனுப்பப்பட்டது

# உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைக்கு உரிய பதில் தராமல் பிரதமர் நழுவல்!

கொழும்பு,ஏப்.30

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் கடிதம் நேற்றிரவு லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கு கிடைத்தது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தப் பதில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

ஆனால், நோர்வேத் தூதரகம், நோர்வே வெளிவிவகார அமைச்சு ஆகியவை ஊடாக இக்கடிதம் நேற்று மாலையே லண்டனில் மதியுரைஞர் பாலசிங்கத்தைச் சென்றடைந்தது.

அதேசமயம் இக்கடிதத்தின் மூலப் பிரதி, மதியுரைஞர் பாலசிங்கத்துக்கு விலாசமிடப்பட்டு கிளிநொச்சியில் உள்ள புலிகளின் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

ஆங்கில மொழியில் மட்டுமல்லாமல் தமிழ் மொழி பெயர்ப்பிலும் பிரதமரின் பதில், புலிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இரண்டிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனித்தனியாகக் கையெழுத்திட்டுள்ளார்.

பிரதமரின் பதில் கடிதத்தில் தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் கிடைத்த ஆக்கபூர்வமான பயன்கள், புலிகளும அரசும் இணைந்து

**பிரதமர் ரணில் புலிகளுக்கு அனுப்பிய பதில் கடிதத்தின் முழு விவரம் 2 ஆம் பக்கத்தில்**

மேற்கொண்ட முயற்சிகள், முன்னேற்றங்கள் என்பன ஆரம்பத்திலேயே விலாவாரியாக விவரிக்கப்பட்டுள்ளன.

மேலும் கடிதத்தில் -

★ வாஷிங்ரன் முன்னோடிக் கருத்தரங்கில் புலிகள் சேர்க்கப்படாமை.

★ யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள கடப்பாடுகளும் கடமைகளும் நிறைவேற்றப்படாமை.

★ உள்நாட்டில் இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்களும், துயரங்களும்.

★ வடக்கிலுள்ள நகரங்களிலும் பொதுமக்களின் குடியிருப்புக்களிலும் உள்ள இராணுவநிலைகள்.

★ அரசின் பாரிய பொருளாதாரக் கொள்கைகளிலும் உபாயங்களிலும் வடக்கு - கிழக்கு மக்கள் ஓரங்கட்டப்படல்.

- ஆகிய விடயங்கள் தொடர்பாக புலிகள் தெரிவித்துள்ள கருத்துக்கு தனது பக்கக் கருத்துக்களைத் தெரிவிக்கப் பிரதமர் முயன்றுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தும் விடுதலைப் புலிகளின் முடிவை மீள் பரிசீலனை செய்து மீண்டும் சமாதான முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு இந்தப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாவுடன் மந்திராலோசனை:

# பாலா அடுத்த வாரம் வருகிறார்!

## நோர்வே வெளிவிவகார அமைச்சரும் அகாஷியும் அப்போது வன்னி செல்வர்

கொழும்பு,ஏப்ரல்30

**சமாதானப் பேச்சு நடவடிக்கைகள் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இந்தச் சமயத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் அவசர மந்திராலோசனை நடத்துவதற்காக புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இன்னும் ஒரு வாரகாலத்துக்குள் வன்னிக்கு வருகின்றார்.**

**அவர் வன்னியில் நிற்கும் சமயம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான பீற்றர்ஸன் மற்றும் இலங்கை அமைதி முயற்சிகள் தொடர்பான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி ஆகியோரும் வன்னிக்கு வருகைதருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. தலைவர் பிரபாகரனையும் மதியுரைஞர் பாலசிங்கத்தையும் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடுவர்.**

தாம் வன்னிக்கு வரவுள்ளார் என்பது பற்றிய தகவலை அன்ரன் பாலசிங்கம் உதயனுக்கு உறுதிப்படுத்தினார்.

சமாதான முயற்சிகளை இடைநிறுத்தி புலிகளின் சார்பில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பிரதமர் ரணில விக்கிரமசிங்காவுக்கு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்திற்கு பிரதமர் பதில் அனுப்பியுள்ளார் எனத் தெரிகின்றது.

அந்தப் பதிலில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் குறித்து தலைவர் பிரபாகரனுடன் அந்தரங்க ஆலோசனை நடத்துவதும் அன்ரன் பாலசிங்கத்தின் வன்னி வருகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

பாலசிங்கம் வன்னியில் தங்கியிருக்கும் சமயம் - அனேகமாக மே 7 ஆம் திகதி - ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி வன்னி வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு அடுத்த வாரத்தில் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் தலைவருடன் மந்திராலோசனை அதன் பின்பே பதில் என்கிறார் பாலசிங்கம்

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் கடிதம் கிடைத்துள்ளது. வாசித்துள்ளேன். நான் வன்னி சென்று தலைவர் பிரபாகரனுடன் இக்கடிதம் குறித்து மந்திராலோசனை நடத்துவேன். அதன் பின்பே பிரதமரின் பதில் கடிதம் குறித்து எமது இயக்கத்தின் நிலைப்பாடு வெளியிடப்படும்."

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.

பிரதமரின் பதில் கடிதம் தொடர்பாகப் புலிகளின் பிரதிபலிப்பைப் பெறும் நோக்கோடு மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(ஐ)



## நோர்வே தூதர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம்

கிளிநொச்சி,ஏப்.30

சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் இடைநிறுத்தியதை அடுத்து உருவாகியிருக்கும் நெருக்கடி நிலை குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் கலந்துரையாடுவதற்காக நோர்வே தூதர் ஹான்ஸ் பிரட்றீசர் இன்று கிளிநொச்சிக்கு வருகைதருகிறார்.

அவருடன் முன்னாள் தூதரும், நோர்வே சமாதானக் குழுவின் ஆலோசகருமான ஜோன் வெஸ்பேர்க்கும் வருகின்றார்.

இன்று காலை 9.30 மணிக்கு அவர்கள் இருவரும் தமிழ்ச்செல்வனை சந்திப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக விடுதலைப் புலிகள் எடுத்த முடிவை அடுத்து உருவாகியுள்ள நெருக்கடி நிலை குறித்து கலந்துரையாட நேரம் ஒதுக்கித் தருமாறு நோர்வே தூதரகம் விடுதலைப் புலிகளிடம் கோரியிருந்தது.

அந்த அடிப்படையில் இன்றைய சந்திப்பு இடம்பெறுகின்றது.

(ஐ-3)

## கோட்டையில் புதிய படை முகாம்; பொது அமைப்புகள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.கோட்டைப் பகுதியில் படைமுகாம் அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைக்கு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஆட்சேபம் தெரிவித்திருக்கின்றனர்.

புதிய படைமுகாமை அமைப்பதற்காக யாழ்.கோட்டைப் பகுதியில் பாதுகாப்பு அமைச்சு தற்போது தீர்மானித்துள்ள பிரதேசம், அதற்காக முன்னர் திட்டமிடப்பட்ட யாழ்.மாநகர சபை வளாகப் பிரதேசத்திற்கு எந்த வகையிலும் வேறுபாடானதல்ல - என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியதாக எங்கு படைமுகாம் அமைக்கப்பட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மாநகரசபை வளாகப் பகுதியில் முகாம் அமைக்கக் கூடாது என்பதற்காக, நாங்கள் தெரிவித்திருந்த காரணங்கள் இங்கேயும் பொருந்துவனவாக உள்ளன. யாழ்.கோட்டை மற்றும் அதன் மேற்குப் பகுதிகளில் படைமுகாம் அமைக்கப்படுவதானது, எமது மக்களின் இயல்பு வாழ்க்கையை எவ்வகையிலும் அச்சுறுத்தலுக்குள்ளாக்

(14 ஆம் பக்கம் பார்க்க)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக வருடாந்த வட்டியை மாதாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

PHOENIX O&M 0625

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணும் உறுதியை மேலும் வலுவூட்ட புலிகளுக்கு ரணில் அழைப்பு

கலாநிதி அன்ரன் பாலசிங்கம்
அரசியல் ஆலோசகர்,
தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதம சமரசப் பேச்சாளர்,
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகம்,
கிளிநொச்சி.

அன்பார்ந்த கலாநிதி பாலசிங்கம் அவர்கட்கு,

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான முன்னெடுப்பில் எழுந்துள்ள சிக்கலான சில விடயங்கள் தொடர்பில் தங்கள் அமைப்பின் கவலையைத் தெரிவித்து தாங்கள் எழுதிய ஏப்ரல் 21ஆம் திகதி கடிதத்திற்குப் பதிலளித்து எழுதிய 2003 ஏப்ரல் 22 ஆம் திகதிய எனது கடிதத்திற்கு மேலதிகமாக நான இதனை எழுதுகின்றேன்.

இரு தரப்பினரும் காட்டிய நேர்மை மற்றும் உறுதிப்பாட்டின் விளைவாக 14 மாத காலத்தில் யுத்தநிறுத்த உடன்படிக்கை வலுப்படுத்தப்பட்டது என்பதிலும், நாடு முழுவதிலும் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நோக்கி குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதிலும் என்னுடைய முழுமையான உடன்பாட்டை நான் ஆரம்பத்திலேயே தெரிவிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக -

யுத்தநிறுத்தம் 14 மாத காலமாகச் செயற்பாட்டில் உள்ளது. பொதுமக்கள் மற்றும் போரில் ஈடுபடுபவர்கள் நாளாந்தம் இறக்கின்ற மற்றும் அங்கவீனர்களாகக் காணப்படுகின்ற நிலை இலலாதொழிக்கப்பட்டது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடைமுறைகள் பலப்படுத்தப்பட்டதுடன் செயற்பாடுகளும் பரப்பெல்லைகளும் விரிவுபடுத்தப்பட்டன. முன்னைய நிலையின் கீழ் மோதல்களுக்கு வழிவகுக்கக்கூடிய நெருக்கடியான நிலைமைகள் தணிக்கப்பட்டுத் தீர்வுகாணப்பட்டன.

இராணுவம் நிலைகொண்ட வழிபாட்டுத் தலங்களும் பாடசாலைகளும் கையளிக்கப்பட்டன.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தீர்மானங்களை எடுப்பதற்காக இரு தரப்பினருக்கும் சமமான பங்களிப்புள்ள 'சிரான்' என்ற நிறுவனத்தை நிறுவின.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கூட்டாக நிதி வழங்குநர்களை அணுகியதன் மூலம் நிதிசார் செயற்பாடுகளுக்காக வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

★ முஸ்லிம்கள் தொடர்பான சில விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

★ இரு தரப்பினராலும் சமஷ்டி மற்றும் அரசாங்க கட்டமைப்புக்களைப் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

★ பால்நிலை விடயங்களுக்கான கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

★ இரு தரப்பினருக்குமிடையே செயற்பாட்டு மட்டத்தில் ஆக்கபூர்வமான செயற்பாட்டு உறவுகள் ஏற்படுத்தப்பட்டன.

★ வடக்கு - கிழக்கில் மனிதாபிமான மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக இருபக்க மற்றும் பல பக்க சர்வதேச உதவி வழங்குநர்கள் ஏற்கனவே குறிப்பிடத்தக்களவு நிதியினை (30 மில்லியன் அமெரிக்க டொலரிலும் அதிகமாக) வழங்கியுள்ளனர்.

எல்லா விடயங்களிலும் ஓர் உடன்பாட்டைக் காண இயலாதுள்ளபோதிலும் ஒத்துழைத்துச் செயற்படுவதென்ற எமது கூட்டுத் தீர்மானம், சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றுள்ளதோடு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவை பங்குபற்றுவதற்கும் வழிவகுத்துள்ளது. ஆகவே, 14 மாதகாலச் சமாதானமானது எமது மக்களுக்கு உறுதியான நம்பிக்கையையும் முன்னேற்றத்தையும் அளித்துள்ளது.

தாங்கள் குறிப்பிட்டுள்ளவாறு 'வேதனைமிக்க முடிவை' எடுப்பதற்கு தங்களது அமைப்பை இட்டுச் சென்றதாகத் தோனறும் பல்வேறு காரணங்களை ஒவ்வொன்றாக எடுத்து நோக்க விரும்புகின்றேன்.

1) வாஷிங்டன் முன்னோடிக் கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் சேர்க்கப்படாமை.

தாங்கள் அறிந்திருக்கக்கூடியவாறு ஜப்பானிய அரசாங்கம் டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாக வாஷிங்ரன், பிரஸல்ஸ், ஒஸ்லோ ஆகிய இடங்களில் முன்னோடிக் கருத்தரங்குகளை நடத்த யோசனை கூறியது. பின்னர் கடந்த நவம்பரில் நடைபெற்ற ஒஸ்லோக் கூட்டம் இந்நோக்கத்தை அநேகமாக நிறைவேற்றிவிட்ட காரணத்தால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல் விடுவது என நோர்வே அரசாங்கம் கருதியது. அதன்பின் பிரதானமாக ஈராக் நெருக்கடியுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட திட்ட ஏற்பாட்டுக் காரணங்களால் ஐரோப்பாவில் கூட்டத்தை நடத்தும் முடிவு மாற்றப்பட்டதுடன் மே மாதத்தில் கொழும்பில் ஒரு முன்னோடிக் கூட்டத்தை நடத்த உத்தேசிக்கப்பட்டது. ஹக்கோணியில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வேற்பாடுகள் ஆராயப்பட்டன.

ஏப்ரல் மாதத்தில் வாஷிங்ரன் கருத்தரங்கை முன்னெடுதது செல்வதற்கு வேறு இரு முக்கியத்துவமுடைய காரணங்கள் இருந்தன. முதலாவதாக உலக வங்கியினதும் சர்வதேச நாணயநிதியத்தினதும் முக்கியமான இளவேனில் கூட்டங்களில் பங்கேற்பதற்குச் சமுகமளிப்பவர்கள் வாஷிங்ரனில் இருப்பவர்கள் என்பதால் கருத்தரங்கிற்கு மிக முக்கிய உதவி வழங்குநர்கள் சமுகமளிப்பதை இயலச் செய்வது. அடுத்த காரணம் உதவி வழங்குநர்கள் ஈராக் போரை அடுத்து எழுந்த நிலைமையின் .

அதன் விளைவாக ஈராக்கின் தேவைகளுக்காக அவர்களின் கவனம் ஈர்க்கப்படுவதற்கு முன்னதாக அவர்களிடம் இருந்து இம்முன்னெடுப்புக்கு ஒப்புதலைப் பெறுவது முக்கியமாக இருந்தமையாகும்.

வாஷிங்ரன் முன்னோடிக் கருத்தரங்கு உறுதியளிக்கும் ஒரு மாநாடல்ல. இக்கருத்தரங்கில் சமுகமளித்த பலபக்க அமைப்புக்கள் அக்கூட்டத்தில் எமது நாட்டுக்கான அவர்களது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கக் கூடுமாயிருக்கும் தொகையை அறிவித்தன.

ஐக்கிய அமெரிக்காவின் சட்டத்தின்படி இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பாக இருப்பதே இக்கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் சமுகமளிக்கமுடியாமற் போனமைக்கான காரணமாகும். இதில் தமிழீழ விடுதலைப் புலிகளால் பங்கேற்க முடியாமற் போனமைக்காக நான் வருந்துகின்றேன். இந்த நிலைமைக்கு அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்ட முடியாது என்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

வடக்கு - கிழக்கு மீளக்கட்டியெழுப்புவதில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு இலங்கையின் புனரமைப்பிற்கும் அபிவிருத்திக்கும் உறுதியளிக்கும் மாநாடாக ஜப்பானிய அரசாங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டதே டோக்கியோ மாநாடாகும். இம்மாநாடு ஜப்பானிய பிரதம அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

2) யுத்தநிறுத்த உடன்படிக்கையில் விளக்கப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளும் நடைமுறைப்படுத்தப்படாமை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் நியதிகளை நிறைவேற்றும் கடப்பாடு இரு தரப்பினருக்கும் உண்டு. உடன்படிக்கைக்கு இணங்கி செயற்படுவதில் முன்னேற்றம் காணப்படுகின்ற அதேவேளை, யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குச் செய்ய வேண்டியவை இன்னும் நிறைய உண்டு என்பதில் நான் தங்களுடன் உடன்படுகிறேன்.

இருதரப்பினரும் அவ்வாறு செய்வதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள் வேண்டுமென்பதே எங்கள் கருத்து. இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு இயலுமான அளவிற்கு, எல்லா அம்சங்களிலும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்துவதற்காக துணை புரிந்துள்ளதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

கள நிலைமையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதே இறுதி நோக்கம். ஆயினும், போர் நீண்டகாலமாக நடைபெற்ற காரணத்தினால் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான செயற்பாடு என்பது ஒரு கடினமான வழிமுறையாக உள்ளது. இரு பகுதியினரும் இயல்பு நிலைக்கு மீள்வதற்கு எடுக்கும் காலம் பற்றி பொறுமை இழந்தவர்களாக உள்ளனர் என்பதை நான் அறிவேன். முன்னேற்றம் காண்பதற்கு எங்கள் ஒன்றுபட்ட அர்பபணிப்பை புதுப்பிப்பது அவசியமாகும்.

3. உள்நாட்டிலே இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்களும் துயரங்களும்.

அரசாங்கமும் தங்கள் அமைப்பும் சர்வதேச சமுதாயமும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் தற்போதைய நிலைமையை இயன்றளவு விரைவாக மாற்றுவதற்கே அதிமுன்னுரிமை கொடுத்துள்ளன.

நாங்கள் கடந்த பொதுத் தேர்தலின் போது -

(அ) வடக்கு மற்றும் கிழக்கு மக்களுடைய வாழ்க்கையை இலகுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும்.

(ஆ) போரினால் இடம்பெயர்ந்த மற்றும் ஆதரவற்ற நிலைக்கு ஆளாக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் - உறுதியளித் திருந்தோம்.

உண்மையிலேயே இவ்விடயங்களில் ஒருவித முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் உலக வங்கியிடமிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் குறிப்பிடத்தக்களவு கடன்களை உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவதற்காகப் பெற்றுள்ளது. அதனால், இடம்பெயர்ந்துள்ள மக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் குடியேறவுள்ள காணிகளிலிருந்து கண்ணிவெடிகளை அகற்றுவது மற்றொரு பிரச்சினையாகும். கண்ணிவெடிகளை அகற்றும் மனிதாபிமானப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்த பல்வேறு சர்வதேச உதவி வழங்குநர்களின் உறுதுணையுடன் நல்ல செயல் விளைவுகளைத் தரும நிகழ்ச்சித்திட்டம் செயற்பட்டு வருகின்றது. தங்களது தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அதன் கண்ணிவெடி அகற்றுவதற்கான மனிதாபிமான பிரிவும் இம்முயற்சியில் வன்னிப் பகுதியில் ஆற்றி வரும் பணி பெரிதும் பாராட்டத்தக்கது.

உண்மையிலேயே மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகச் செய்ய வேண்டியவை இன்னும் மிக அதிகமாக உள்ளன. இருபது வருட காலப் போரின் விளைவாக அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பு சீரற்று உள்ளதால் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதங்கள் இருந்து வந்துள்ளன. இத்தகைய செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக ஆக்குவதற்கும் வலிமையூட்டுவதற்கான படிமுறைகளைப் பற்றியும், போரினால் மிக மோசமாகப் பாதிப்புக்குள்ளான பகுதி மாவட்டங்களில் நிர்வாகத்திற்கான ஒரு செயல்திறன் மிக்க கூட்டிணைப்பு பொறிமுறையை நிறுவுவது பற்றியும் கடந்த சில வாரங்களாக நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். அரசாங்கம் இம்முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தமுன் இவை பற்றித் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு விளக்கும்.

சிரான் அமைப்பினை அதிக செயற்றிறன் வாய்ந்ததாக உருவாக்குவது தொடர்பான எங்கள் கருத்துக்களையும் தங்களுக்குத் தெரியப்படுத்தவுள்ளோம். அத்துடன், தேவைப்படுகின்ற மெருகூட்டல்கள் தொடர்பாக ஓர் உடன்பாட்டைக் காண எதிர்பார்த்துள்ளோம். பேர்னாட் குணத்திலகவின் 2003, ஏப்ரல் 28ஆம் திகதிய கடிதம் மூலம் தமிழ்ச்செல்வனுக்குத் தெரியப்படுத்தியபடி அங்கீகரிக்கப்பட்ட 15 நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகளை வடிவமைத்துள்ளதோடு, வடக்கு - கிழக்குப் புனரமைப்பு நிதியத்திற்கான முறைசார் ஏற்பாடுகளையும் செய்து முடித்துள்ளோம். இந்தப் பிரச்சினையை நாங்கள் தீர்க்கும் முறை பற்றி தங்களுக்கு நோர்வே அனுசரணையாளர் விளக்குவர்.

4. வடக்கிலுள்ள நகரங்களையும் பொதுமக்களின் குடியிருப்புக்களையும் தன்னகத்தே வைத்துள்ள இராணுவ நிலைகள்:

யுத்தநிறுத்தம் செய்யப்பட்டது தொடக்கம் அரசாங்கக் கொள்கையானது பொதுமக்கள் தங்கள் பாரம்பரிய வாழ்க்கையை நடத்துவதற்கு இயலச் செய்யும் முகமாக இயல்பு நிலையை உருவாக்குவதாகும். அதிகரித்த மீன் உற்பத்தியும் கடந்த பெரும்போகத்தின் போது வன்னியில் கிடைத்த ஆகக் கூடிய நெல் விளைச்சலும் இவற்றுக்குத் தெளிவான சான்றுகளாகும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்போது தேவைப்படுகின்ற கட்டுப்பாடுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ள போதிலும் கடந்த ஓராண்டு காலமாக மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மிகவும் தெளிவாகத் தென்படுகின்றன என நான் நம்புகின்றேன். நான் முன்பு குறிப்பிட்டது போன்று போரால் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தனது 2003 ஏப்ரல் மாத 27ஆம் திகதிய கடிதம் ஊடாக தமிழ்ச்செல்வனுக்கு யாழ்ப்பாண நகரிலுள்ள இரு ஹோட்டல்களையும் அதனைச் சுற்றியுள்ள வீடுகளையும் இராணுவம் விடுவிக்கும் தீர்மானத்தினை அறிவித்துள்ளார். இராணுவத் துருப்புக்கள் குடியமர முன் வடிவமைக்கப்பட்ட கட்டடங்களுக்கான வழங்கு கட்டளைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. உயர்பாதுகாப்பு வலயங்களின் மீளாய்வு பற்றி ஜெனரல் நம்பியாரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஜனவரி 6-9 திகதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் குறிப்பிட்டவாறு மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் போது பெற்றுக்கொள்ள முடியும்.

5. அரசாங்கத்தின் பாரிய பொருளாதாரக் கொள்கைகளிலும் உபாயங்களிலிருந்தும் வடக்குக் கிழக்கு மக்கள் ஓரங்கட்டப்படுதல்

துரித அபிவிருத்திக்கான நோக்கத்தினையும் உபாயங்களையும் உள்ளடக்கிய 'இலங்கையை மீளக் கட்டியெழுப்பும்' ஆவணத்தினைக் கவனமாக வாசிப்போர் மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக எவ்வளவு தூரம் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்பர்.

"இலங்கையை மீளக் கட்டியெழுப்புதல்" என்பது அரசாங்கத்தின் தேசிய பொருளாதாரக் கொள்கையாகும். அதன் நோக்கம் ஒரு தசாப்தத்திற்கு உயர் பொருளாதார வளர்ச்சியை ஈட்டி நிலைநிறுத்துவதே. இதன் மூலம் -

அ.) வேலை வாய்ப்புக்கள் உருவாக்கம், அத்துடன்

ஆ.) வடக்குக் கிழக்கில் நீண்டகால அபிவிருத்திக்கு போதியளவு பொருளாதார வளங்களின் உருவாக்கம்.

வடக்குக் கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் குறிப்பிடத்தக்க திட்டங்களும் உபாயங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆலோசித்துத் தீட்டப்படும் இம் முனனெடுப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை புறம்தள்ளும் எண்ணம் எவ்விதத்திலும் (ஆ) வடக்கு - கிழக்கின் நீண்டகால அபிவிருத்திக்குப் போதியளவு பொருளாதார வளங்களின் உருவாக்கம்.

வடக்கு, கிழக்கில் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் குறிப்பிடத்தக்க திட்டங்களும் உபாயங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஆலோசித்துத் தீட்டப்படும். இம்முன்னெடுப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளை புறந்தள்ளும் எண்ணம் எவ்விதத்திலும் இல்லை.

அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் சாதனைகளுள் ஒன்று. வடக்கு - கிழக்குப் புனரமைப்புக்கும் புனர்வாழ்விற்கும் தேவைப்படுவனவற்றை இனங்காண்பதற்கு பல முகவர் தேவைகள் மதிப்பீட்டை தயாரிப்பதில் ஒத்துழைத்து செயலாற்ற இயன்றமையாகும். இவ்வறிக்கையை இரு சாராரும் ஏற்றுக்கொண்டதும். வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கான உத்தியோகபூர்வ திட்டவடிவமைப்பாக அது அமையும். இத்திட்ட வடிவமைப்பு 'இலங்கையை மீளக் கட்டியெழுப்பும்' ஆவணத்தின் திட்ட வடிவமைப்பில் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படும். இத்திட்ட வடிவமைப்பு டோக்கியோ உதவி வழங்குநர் மாநாட்டில் 'இலங்கையை மீளக் கட்டியெழுப்பும்' ஆவணத்திற்கும் மேலதிகமாகச் சமர்ப்பிக்கப்படும்.

நாம் எதிர்பார்க்கின்ற வேகம் இல்லாதபோதிலும் இவ்வாறான சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள வேளையில், இப்போதைக்குப் பேச்சுக்களில் பங்கேற்பதை இடைநிறுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானித்தது மிகவும் துரதிஷ்டவசமாகும்.

எவ்வாறாயினும், பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமே அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதில் தங்களுக்குள்ள அர்ப்பணிப்பை மீளப் புதுப்பித்திருப்பதால் நான் உற்சாகப்ப டுத்தப்பட்டுள்ளதோடு, இதனை மேலும் வலுவூட்டுவதற்கு, தீர்க்கமான - இச்சந்தர்ப்பத்தில் தற்போதைய தங்களது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்து தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளவாறே குறிப்பிடத்தக்களவு வெற்றிகளுக்குக் காரணமான பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குவீகள் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

இறுதியாக சமாதான முன்னெடுப்பு எவ்விததடையுமின்றித் தொடர வேண்டும் என்ற எங்கள் மக்களின் உறுதியான விருப்பத்திற்கு ஏற்ற முழுமையான இணக்கப்பாடாக இது அமையுமென நான் நம்புகிறேன்.

அன்புடன்
உங்கள் அன்பார்ந்த,
ரணில் விக்கிரமசிங்க
(இலங்கைப் பிரதம மந்திரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் இருந்து வெளியேறக்கோரி ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது

# அமெரிக்கப் படைகள் சுட்டதில் 13 அப்பாவி ஈராக்கியர்கள் பலி!

பக்தாத்,ஏப்.30

ஈராக்கின் பலூஜா நகரில் திங்களன்று இரவு அமெரிக்கர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த ஈராக்கியர்கள் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13இற்கும் மேற்பட்ட அப்பாவி ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே அமெரிக்கர்களுக்கு எதிராக ஈராக்கியர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாக உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர்.

தலைநகர் பக்தாத்தில் இருந்து 30 கிலோ மீற்றர் மேற்கே உள்ளது பலூஜாநகர். அங்குள்ள பாடசாலை ஒன்றில் அமெரிக்கப் படையினர் நிலைகொண்டுள்ளனர். அவர்களை வெளியேறக் கோரியே உள்ளூர் ஈராக்கியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அமெரிக்கத் துருப்புக்கள் ஈராக்கில் இருந்து வெளியே போகவேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

அவர்களை நோக்கி அமெரிக்கத் துருப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 13இற்கும் 17இற்கும் இடைப்பட்டோர்கள் கொல்லப்பட்டதாக உள்ளூர்வாசிகள் நேற்றுத் தெரிவித்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

கட்டாரில் இருக்கும் அமெரிக்கப் படைகளின் மத்திய கட்டளைத் தலைமையகம் பலூஜாவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எதுவும் இடம் பெறவில்லை என்று நேற்றுக் கூறியது. பக்தாத்தில் நிலைகொண்டுள்ள படை அதிகாரிகளோ தமக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்றார்கள்.

தம்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாலேயே தாம் பதில் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கப் படையினர் கூறியுள்ளனர். ஆனால், அங்கு 200இற்கும் மேற்பட்ட ஆயுதங்கள் ஏதுமற்ற அப்பாவிப் பொதுமக்களே, அமெரிக்கப் படைகளை பாடசாலையை விட்டு வெளியேறுமாறு கேட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக சுயாதீன செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனியன்று பக்தாத் அருகே இருந்த அமெரிக்க ஆயுதக் கிடங்கு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 12 ஈராக்கியர்கள் பலியான சம்பவத்தின் பின்னர் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்ட சம்பவமாக இது இருப்பதாகக் கூறப்படுகின்றது. (ம)



ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் பக்தாத்தில் ஸ்திரமற்ற தன்மை ஒன்று ஏற்பட்டுள்ளது. இதனை விரைவில் முடிவுக்குக் கொண்டுவந்து அங்கு இடைக்கால அரசு ஒன்று அமைப்பது பற்றி ஈராக்கியத் தலைவர்கள் தீவிரமாக ஆராய்ந்துவருகின்றனர்.

கடந்த திங்களன்று சுமார் 250 உள்ளூர் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து விவாதித்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம்.

# சவூதி அரேபியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ்

அபுதாபி,ஏப்.30

வளைகுடா நாடான சவூதி அரேபியாவில் இருந்து தனது படைகள் அனைத்தையும் விலக்கிக் கொள்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. சில பயிற்சியாளர்கள் தவிர மிகுதி அனைத்து அமெரிக்கப் படைகளும் அங்கிருந்து அகன்றுவிடும் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்த ரம்ஸ்பீல்ட், அங்கு நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் தளபதிகளுடன் நடத்திய விரிவான பேச்சுக்களின் பின்னர் அங்கிருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறும் அறிவிப்பை வெளியிட்டார்.

சவ,தி அரசுடன் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தத்தின்படி இந்தக் கோடை காலம் முடிவதற்கு முன்பாக அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்பட்டு விடும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார்.

1991இல் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தின்போது குவைத்தின் பாதுகாப்பு மற்றும் ஈராக் அருகில் உள்ள நாடுகளின் பாதுகாப்பு என்பவற்றுக்காக அமெரிக்கா தனது துருப்புக்களை சவூதி அரேபியாவில் நிலை நிறுத்தியது.

ஈராக்கில் விமானங்கள் பறப்பதற்கு ஐ.நா.தடைவிதித்த பகுதிகளில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்கும இந்த அமெரிக்கத் துருப்புக்கள் பயன்படுத்தப்பட்டன.

முதலில் 5ஆயிரம் துருப்புக்களே சவ,தியில் இருந்தன. எனினும், ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையின் போது அந்த எண்ணிக்கை 10ஆயிரமாக அதிகரிக்கப்பட்டது.

இப்போது அந்த அனைத்துப் படையினரும் சவூதியில் இருந்து வெளியேறிவிடுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபிய அரசு தேவை என்று கருதினால் நாம் மீண்டும் இங்கு வருவோம் என்று அமெரிக்கப் படை அதிகாரி ஒருவர் கூறினார்.

அமெரிக்கப் படைகள் சவூதியில் நிலைகொண்டுள்ளதால் இஸ்லாமிய மதவாதிகள் மத்தியிலும் ஏனைய இஸ்லாமிய நாடுகளிலும் பெரும் கசப்புணர்வைத் தோற்றுவித்திருந்தது. (ம)

## சதாம் ஆலோசகர் சரண்!

பக்தாத்,ஏப்.30

ஈராக்கின் முன்னாள் எண்ணெய்த் துறை அமைச்சரும் சதாம் ஹுசைனின் ஆலோசகருமான அமிர் மொஹம்மட் ரஷீட் பக்தாத்தில் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தார்.

இவர் அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் ஈராக்கிய உயிரியல் விஞ்ஞானியான டாக்டர் ஜேர்ம் என்பவரின் கணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரஷீட் சரணடைந்ததை அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

ஈராக்கில் தீவிரமாகத் தேடப்படுபவர்களாக அமெரிக்கா அறிவித்த 55பேர் பட்டியலில் 47ஆவது இடத்தில் இருப்பவர் ரஷீட். இவருடன் இந்தப் பட்டியலில் உள்ள 14பேர் அமெரிக்கப் படைகள் வசம் உள்ளனர். (ம)

# பாகிஸ்தான் வருமாறு வாஜ்பாய்க்கு அந்நாட்டுப் பிரதமர் அழைப்பு

இஸ்லாமாபாத்,ஏப்.30

இந்தியப் பிரதமர் வாஜ்பாயை பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு அந்நாட்டுப் பிரதமர் மிர் ஜபருல்லா கான் நேற்றுமுன்தினம் இரவு தொலைபேசி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் பேச்சு நடத்துவதற்காக வாஜ்பாய் பாகிஸ்தானுக்கு வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டதாக அந்த நாட்டுத் தொலைக்காட்சி தெரிவித்தது.

இரு நாடுகளிடையேயான விமானப் போக்குவரத்துக்களை மீண்டும் ஆரம்பித்தல், விளையாட்டுகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வழங்குதல் உட்பட முக்கிய விடயங்கள் பற்றி தொலைபேசியில் இரு பிரதமர்களும் உரையாடினர்.

இந்த விடயங்கள் குறித்து விரிவாகப் பேச்சு நடத்த வசதியாக பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவேண்டும் என்று அப்போது பாகிஸ்தான் பிரதமர் இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுத்தார்.

அதேபோன்று தானும் இந்தியாவுக்கு வருவதற்கு தயாராக இருப்பதாகவும் ஜபருல்லா கான் சொன்னா - என்று பாகிஸ்தான் தொலைக்காட்சி மேலும் தெரிவித்தது.

ஒரு வாரத்துக்கு முன்னர் காஷ்மீர் மாநிலத்துக்குச் சென்ற வாஜ்பாய், பாகிஸ்தானுக்கு நேசக்கரம் நீட்டுவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதனை அடுத்தே பாகிஸ்தான் பிரதமர் இந்தியப் பிரதமருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியுள்ளார். (ம)


## வாஜ்பாய் நிராகரிப்பு

புதுடில்லி,ஏப்.30

தனது நாட்டுக்கு வருமாறு இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு பாகிஸ்தான் பிரதமர் தொலைபேசி மூலம் விடுத்த அழைப்பை வாஜ்பாய் நிராகரித்துள்ளார். இந்திய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த பாரதீய ஜனதாக் கட்சியின் நடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் வாஜ்பாய் தனது முடிவைத் தெரிவித்தார்.



# ஐவரிகோஸ்ட் கிளர்ச்சித் தலைவர் கூலிப்படையினரால் கொலை!



லண்டன்,ஏப்.30

ஐவரிகோஷ்டில் கிளர்ச்சியாளர் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இதனால் அவர்கள் அரசுடன் நடத்தி வந்த சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பெலிக் டோ என்ற அந்தத் தலைவர் சனியன்று காணாமற்போனதாக அவரது அமைப்பான ஐவரிகோஸ்ட் தேசப்பற்று முன்னணியினர் முன்னதாகத் தெரிவித்திருந்தனர். தற்போது அவர் கொல்லப்பட்டுவிட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

அண்டைநாடுகளான லைபீரியா மற்றும் சியாராலியோன் ஆகியவற்றில் இயங்கிவரும் கூலிப் படைகளாலேயே இவர் கொல்லப்பட்டதாக அவரது அமைப்பினர் கூறியுள்ளனர். அவரது உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் மேற்குப் பகுதியில் பெரும்பாலான பிரதேசம் கிளர்ச்சியாளர்கள் வசம் இருக்கின்றது. தற்போதைய அதிபர் கபாகோ நாட்டின் இராணுவத்தில் திடீரென மேற்கொண்ட ஆட்குறைப்பால் அதிருப்தி கொண்ட பெலிக் டோவும் அவரது ஆதரவாளர்களும் கிளர்ச்சியில் இறங்கினர்.

அரச படைகளுடன் மோதல்கள் இடம்பெற்றன. எனினும், நாட்டின் மேற்குப் பகுதியில் பெரும் பகுதியை அவர்கள் இன்னும் தம்வசம் வைத்திருக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு அவர்களுடன் பேசி வந்தது.

பெலிக் டோ இறந்ததன் காரணமாக இந்தச் சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன. எனினும் இந்தக் கொலையில் அரசு நேரடியாகத் தொடர்புபட்டிருக்கவில்லை என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

# 'சார்ஸ்' நோய்க் கிருமியின் தன்மை மாறிக்கொண்டே இருக்கின்றது!

## விஞ்ஞானிகள் ஆச்சரியம்

நியூயோர்க்,ஏப்.30

'சார்ஸ்' நோயை உண்டாக்கும் வைரஸ் கிருமிகள் அடிக்கடி மாறிக் கொண்டே இருப்பதால் அவை ஆராய்ச்சியாளர்களின் பார்வையில் இருந்து தப்பிவிடுகின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கனடாவில் 'சார்ஸ்' பாதித்த 40 சதவீதத்தினரை சோதித்த போது அவர்களது உடலில் நோய்க்கான கிருமிகள் இல்லை. நோயை ஏற்படுத்தும் முக்கியமான கிருமி கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு மாறிவிடுவது இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த நோய் எப்படிப் பரவுகின்றது என்பதைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகள் தொடர்ந்தும் முனைப்புடன் இடம்பெறுகின்றன. இருமல் மற்றும் தும்மலின் போது நோயாளியின் வாயில் இருந்து இந்நோய்க் கிருமிகள் வெளியாகி மற்றவர்களுக்குப் பரவுவதாக முதலில் கருதப்பட்டது.

ஆனால், ஹொங்கொங்கில் ஓர் அடுக்குமாடி குடியிருப்பில் [illegible] இந்த நோய் திடீரெனப் பரவியது. எனவே இந்நோய் வேறுவிதமாகப் பரவுவதாகத் தெரியவந்தது. அந்த அடுக்குமாடிக் குடியிருப்பின் கழிவு நீர்க்குழாய் வழியாக 'சார்ஸ்' நோய்க் கிருமி பரவியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இப்பகுதியில் 'சார்ஸ்' நோயாளிகள் அனைவருக்கும் வயிற்றுப் போக்கு ஏற்பட்டதை அடுத்தே இந்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

'சார்ஸ்' நோய்க் கிருமி எப்படி வேகமாகப் பரவுகின்றது என்ற சரியான விடயமும் விஞ்ஞானிகளுக்குப் புரியாத விடயமாகவே உள்ளது. 'சார்ஸ்' நோய்க் கிருமியின் தன்மையை சரியாகப் புரிந்துகொள்ளும் நோக்கத்தில் அமெரிக்கா, கனடா, ஹொங்கொங் மற்றும் சில நாடுகளைச் சேர்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் இணைந்து செயற்படுகின்றனர்.

'சார்ஸ்' நோய்க் கிருமியை அவர்கள் கண்டுபிடித்துவிட்டனர். ஆனால், சாதாரணமாக தடிமன் பிடித்தவர்களுக்கு உள்ள அறிகுறிகள்தான் பெரும்பாலான 'சார்ஸ்' நோயாளிகளுக்கும் உள்ளது. எனவே தடிமனுக்கும் 'சாஸ்' நோயாளிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கண்டுபிடிக்கும் முயர்சியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (ம)

## ஆசிய நாடுகளின் தலைவர் தாய்லாந்தில் நேற்று மாநாடு

பாங்கொக்,ஏப்.30

இதுவரை 330 பேர்களின் உயிரைக் காவுகொண்ட 'சார்ஸ்' நோய் பரவலைத் தடுப்பதற்கு எடுக்கவேண்டிய கூட்டு முயற்சி பற்றி ஆராய்வதற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் தலைவர்கள் தாய்லாந்தில் கூடி ஆராய்ந்துள்ளார்கள்.

'சார்ஸ்' நோய்த் தாக்கம் அதிகமாகக் காணப்படும் சீனாவில் நோய்த் தொற்றுக்கு உள்ளான ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதே நேரம் மேலும் பலர் உயிரிழந்துள்ளனர். திங்கட்கிழமை வரை 139 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சீன அரசு தெரிவித்தது. ஹொங்கொங்கிலும் 138பேர் உயிரிழந்துள்ளனர்.

'சார்ஸ்' நோய் அச்சம் காரணமாக கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. உல்லாசப் பயணத்துறை, வர்த்தகம் போன்ற துறைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கை பிரச்சினையில் இந்தியா பகிரங்கமாகத் தலையிடவேண்டும்!

## ம.ஐ.முன்னணி தலைவர் தினேஷ் கோரிக்கை

கொழும்பு,ஏப்.30

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா பகிரங்கமாகத் தலையிட வேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலைப் போக்கவேண்டும்.

- இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கோரிக்கை விடுத்தார்.

சமாதானப் பேச்சுக்களில் புலிகளுக்குச் சார்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நோர்வேயும் செயற்பட்டு வருவது இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயலாகும் எனவும் கூறிய அவர் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு அரசிடம் கோரிக்கை விடுத்தபோதும் அக் கோரிக்கை தட்டிக்கழிக்கப்பட்டுவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் விடுக்கப்பட்டுள்ள சவாலை முறியடிக்கவேண்டும் எனவும் சொன்னார். (ம)

### தேசிய கல் பிரகடனப்படுத்த நடவடிக்கை

இரத்தினக்கல் வகையைச் சேர்ந்த நீலக்கல்லை இலங்கையில் தேசிய இரத்தினமாக அங்கீகரிக்கச் செய்யும் முயற்சியை இலங்கை இரத்தினக்கல் வியாபாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ளது.

ஏனைய நாடுகளில் உள்ளது போல் இலங்கைக்கும் ஒரு தேசிய கல் அவசியம் எனவும் -

ஆகவே, நீலக்கல்லை தேசிய கல்லாகப் பிரகடனம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் - சங்கம் தெரிவித்துள்ளது. நீலக்கல்லை ஜப்பான் தேசிய கல்லாகப் பிரகடனப் படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-12)

# அம்பாறை சென்ற தனியார் பஸ்ஸில் அம்பாந்தோட்டையருகே கொள்ளை!

கொழும்பு,ஏப்.30

அம்பலாங்கொடையிலிருந்து அம்பாறை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று கொள்ளைக்கு இலக்கானது. கடந்த ஞாயிறு நள்ளிரவு அம்பாந்தோட்டை உப்பளம் அருகே கொள்ளையர் பஸ்ஸை நிறுத்தி பயணிகளிடம் கொள்ளையிட்டனர் எனக் கூறப்படுகிறது.

ஆயுதமேந்திய ஆறு கொள்ளையர்கள் பயணிகளின் நகைகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். சில பயணிகளிடமிருந்த செல்லிடத் தொலைபேசிகளும கொள்ளையரினால் எடுத்துச்செல்லப பட்டுள்ளன.

இக் கொள்ளை குறித்து எவரும் கைது செய்யப்படவில்லை. அம்பாந்தோட்டைப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

காலி, கிந்தோட்டைப் பகுதியிலுள்ள இரு கிராமங்களின் முஸ்லிம் குழுக்கள் இரண்டுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஐவர் காயமடைந்தனர். அவர்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மாஹப்புகல, கொடவத்த என்னும் இக்கிராமங்களிலுள்ள இரு குழுக்களுக்குமிடையே கடந்த ஞாயிறு இரவு மோதல் மூண்டது. இது குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## தென்மராட்சி வடவலய சமுர்த்தி வங்கியில் நிதி வைப்பு ஆரம்பம்

தென்மராட்சி,ஏப்.30

தென்மராட்சி பிரதேச வடவலய சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரினால் நிதி வைப்புச் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வரணியில் இயங்கும் சமுர்த்தி வங்கியில் ஆறு லட்சம் ரூபாவுக்கு மேல் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும்-

விரைவில் வாடிக்கையாளர்களுக்கு இந்த நிதியிலிருந்து கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## புதிய வரைவு சமர்ப்பிப்பு

கொழும்பு,ஏப்.30

கடலில் போர்நிறுத்தம் தொடர்பான புதிய வரைவு ஒன்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

கடலில் போர்நிறுத்தம் தொடர்பாக முதலில் முன்வைக்கப்பட்ட வரைபை இலங்கைக் கடற்படையினர் நிராகரித்துள்ளமையை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் இந்த இரண்டாவது கடல் போக்குவரத்துத் தொடர்பான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது சர்வதேச மற்றும் உள்நாட்டு கடல்சட்டங்களைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-12)


கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை - வெற்றிடங்கள்
பாதுகாவலர்கள்
(30 இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள்)
WALK IN INTERVIEW
தகைமைகள்: G.C.E. (சா/த) சித்தி
22 வயது தொடக்கம் 55 வயதுவரை
(பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)
மார்பு 32" குறையாமல்
உயரம் 5' 4" குறையாமல்
(நல்ல தேகாரோக்கியமும் கண்பார்வையும் இருத்தல் வேண்டும்)
நேர்முகப் பரீட்சை:- கிழமை நாள்களில் பி.ப.5.00மணி தொடக்கம் 6.30 மணிவரை
சனிக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் 12.00 மணிவரை
ஆவணங்கள் :
1) கிராம அதிகாரியின் நற்சான்றிதழ்
2) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3) தே.அ.அட்டை
4) வி.அ.அட்டை
- பணிப்பாளர்.
43, கல்லூரி வீதி
(யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக),
யாழ்ப்பாணம். (சி-27514)



விஞைல்ஸ்
சுன்னாகம்
A/L 2005
இரசாயனவியல்: கலீஸ்
பௌதிகவியல : குகன்
இணைந்தகணிதம்: கோணேஸ்
உயிரியல் : தயாபரன்
பொருளியல் : சண்
வணிகக்கல்வி : நந்தீஸ்
கணக்கீடு : பிரபல ஆசிரியர்
தமிழ் : V.M.லிங்கம்
இந்துநாகரிகம்: T.ஸ்ரீஸ்
அளவையியல் : ஜெயசுரேஸ்
ஆரம்பம்:
02-05-2003
- நிர்வாகி.
(17337)



3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
மண் மகிழ 01 ~ 12 ~ 1964

கண் நெகிழ 30 ~ 04 ~ 2000
ஓவியச் செல்வன்
கந்தையா குணசேகரன்
(உரிமையாளர், குணம் ஆட்ஸ்)
குணம் என்னும் குலவிளக்கு அணைந்து
மூன்றாண்டு மூழ்கியதோ உன் நினைவலைகளில்.......
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (17195)
நினைவுகூரும்:
குடும்பத்தினர்.



முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
30.04.2003
HAPPY

BIRTHDAY
செல்வி பிறின்சியா தேவகுமார்
முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவகுமார் சிவஜினி
தம்பதிகளின் செல்வப் புதல்வி
செல்வி பிறின்சியா
தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் இன்று (30.04.2003) புதன்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, பிரான்ஸில் உள்ள குணபாலன் பெரியப்பா குடும்பத்தினர் பிரான்ஸில் உள்ள சுகுமார் பெரியப்பா குடும்பத்தினர், கனடாவில் உள்ள கோபாலசிங்கம் மாமா குடும்பத்தினர், பிரான்ஸில் உள்ள யோகராசா மாமா குடும்பத்தினர் பிரான்ஸில் உள்ள நந்தகுமார் சித்தப்பா மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள அப்பப்பா, அபபம்மா, அத்தைமார், மாமாமார், தாத்தாமார் வெளிநாட்டில் இருக்கும் மச்சானமார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார் மற்றும் புதுக்குடியிருப்பில் இருக்கும் அம்மம்மா, அமமப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தி, மாமா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வண்ணை கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய முருகன் அருளால் பல கலையும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என வாழ்த்துகின்றனர்.
த.பொன்னம்பலம்
அப்பப்பா
112, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம். (17344)



PRINCE
துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்
பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்
பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.


ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 327283-5, 436779 பெக்ஸ்: 446554
தொலைபேசி: 575666
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

# நிலைமை விரைவில் தெளிவாகும்

நெருக்கடிக்கு உள்ளாகி, தடம் விலகியிருக்கும் சமாதான நடவடிக்கை முயற்சிகளை, மீண்டும் சரியான தடத்துக்குத் திருப்பும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுகள் பழையபடி ஆரம்பமாகி, வழமைக்குத் திரும்பும் என்ற நம்பிக்கையைத் தரும் செய்திகள் ஒருபுறம். வழமை நலை உடனடியாகத் திரும்புவதற்கு சாத்தியமில்லை என்ற நம்பிக்கையீனத்தைத் தரும் செய்திகள் மறுபுறமுமாக மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமும், அதன் பின்னர் பல சுற்றுப் பேச்சுகளின் போதும் இணக்கம் காணப்பட்ட பல விடயங்களை அவற்றிற்குரிய கால வரையறைக்குள் அரசுத்தரப்பு நிறைவேற்றவில்லை என்பதே புலிகள் தரப்பின் முக்கிய குற்றச்சாட்டு. புலிகள் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தியதற்கு அதுவே முக்கிய காரணம்.

எனவே, இந்த விடயத்தில் காணப்படக்கூடிய முன்னேற்றமே, சமாதான முயற்சிகளை மீண்டும் அவற்றின் சரியான தடத்துக்கு மாற்றும் என்பதும் தெளிவு.

இதற்காக -

தான் கொடுத்த வாக்குறுதிகளை - தனது கடப்பாடுகளை - நிறைவேற்றுவதற்கு தான் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருப்பதை அரசுத்தரப்பு, புலிகளுக்கு தெளிவுபடுத்த வேண்டியிருக்கும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின், புலிகளுக்கான பதில் கடிதத்தில் இது குறித்து விவரிக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கலாம். நாட்டுக்குள் இடம்பெயர்ந்த அகதிகள் தத்தமது பிரதேசங்களில் - தாயகத்தில் - மீளக்குடியமர வழி செய்யப்படவில்லை. அதில் பெரும் தாமதம் காட்டப்படுகின்றது என்பது புலிகள் தெரிவித்துள்ள குறைபாடுகளில் பிரதானமானது.

அகதிகள் மீள்குடியமர்வு இரண்டுவகைப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்டது. ஒன்று - உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள்; மற்றது - உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில்.

உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே மக்கள் மீள்குடியமர்வு தொடர்பாக பல அவசர நடவடிக்கைகளை - முன் முயற்சிகளை - அரசு ஆரம்பித்திருப்பது தெரிகின்றது. யாழ்.நகரின் மத்தியில் - மக்களின் நெரிசலான குடியிருப்புப் பகுதியில் - தான் நிலைகொண்டிருந்த முகாம் பிரதேசத்தை இடம்மாற்றுவதற்கு இராணுவம் எடுத்திருக்கும் முயற்சி இதன் பிரதிபலிப்புத்தான்.

நகரின் மத்தியில் ஞானம்ஸ், சுபாஸ் ஹோட்டல்களிலும் அவற்றின் சுற்றாடல்களிலும் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் முகாமை யாழ்.கோட்டைப் பக்கத்தில் யாழ்.பொலீஸ் நிலையக் காணி மற்றும் கோட்டைக்கு மேற்குப் புறமாகவுள்ள காணிகள் ஆகியவை அடங்கிய பிரதேசத்துக்கு இடம் மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரின் மத்தியில் நிலைகொண்டிருக்கும் படை முகாமை அங்கிருந்து இடம்மாற்ற எடுத்த முடிவு நல்லதுதான். ஏற்கனவே அரசு - புலிகள் இடையே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு செயலுருக் கொடுக்கும் நடவடிக்கைதான் அது. ஆனாலும், மீண்டும் அந்த முகாமைக் கொண்டு போய் நகரின் மற்றொரு முக்கிய பிரதேசத்தில் ஸ்தாபிக்க முற்படுவது விவேகமான செயல் அல்ல. தமிழர் தரப்பின் இணக்கமின்றி ஒருதலைப்பட்சமாக அரசு முடிவு எடுத்து இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

சமாதானப் பேச்சுக்களிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழும் இணக்கம் காணப்பட்ட ஒரு முடிவை செயற்படுத்துகிறோம் என்று நினைத்து இதனை அரசு செய்ய முற்பட்டிருக்கலாம். அத்தகைய நடவடிக்கையாக இந்தச் செயற்பாட்டை அரசு, புலிகளுக்குச் சித்திரித்தும் காட்டலாம்.

ஆனால், நகரின் மத்தியிலிருந்து நகரின் மற்றொரு முக்கிய பிரதேசத்துக்கு முக்கிய படை முகாமை மாற்றும் இந்த முயற்சி புலிகளைத் திருப்திப்படுத்துமா என்பதுதான் கேள்வி.

அதற்கு அப்பால், உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்தையும் இழுத்தடிக்கவே அரசு விரும்புவதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பின்னணியிலேயே பிரதமரின் பதில் கடிதம் புலிகளுக்கு அனுப்பப்படுகின்றது.

தலைவர் பிரபாகரனும் மதியுரைஞர் பாலசிங்கமும் வன்னியில் ஏனைய புலிகளின் மூத்த தலைவர்களோடு, இக்கடிதத்தின் உள்ளடக்கம் குறித்து விரிவாக ஆலோசனை நடத்துவர். அதன் பின்னர் புலிகளின் பிரதிபலிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

எனவே, அரசு எடுக்கும் நடவடிக்கை புலிகளைத் திருப்திப்படுத்துமா, சமாதானப் பேச்சுகளைச் சரியான தடத்துக்குத் திரும்பவைக்குமா என்பனவெல்லாம் விரைவில் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

# சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு லண்டன் வாசி கருவி அன்பளிப்பு

தென்மராட்சி,ஏப்.30

இரத்தத்தில் குளுக்கோஸ் அளவிடும் பரிசோதனைக் கருவி ஒன்றை மீசாலையைச் சேர்ந்த லண்டன் வாசி ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சலரோக நோயாளர்களைப் பரிசோதனை செய்வதற்கு இக் கருவியில பயன்படுத்[illegible]டும் தகடு தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வ[illegible]கவேண்டியுள்ளதாகவும் - இதனால் வசதி குறைந்த மக்கள் இக்கருவியைப் பயன்படுத்த முடியவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தகடு தனியார் மருந்துக்கடையில் 35 ரூபா வரை விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் இன்னமும் ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்தப் படாததால இக்கருவியின் பயன்பாடு அத்தியாவசியமாகக் கருதப்படுகிறது. ஆயினும், அனைத்து சலரோக நோயாளர்களும் இக் கருவியைப் பயன்படுத்த முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கருவி அண்மையிலேயே வெளிநாடுகளில் பாவனைக்கு வந்துள்ளதால் இரத்தத்தில் குளுக்கோஸ அளவிடும் தகடு இன்னமும் சுகாதாரத திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை என அறியப்படுகிறது. (ஒ-117)

## நாட்டு நடப்பு

### விடியும் நேரம் நெருங்குது

படை நடத்தி, போர் தொடுத்து
பணியவைத்து பகைவர்
அடி பணிந்து தலை குனிந்து
அகன்று சென்ற நாளினை
கொடிய போரின் வெப்பம் நீங்கி
குளிர்ந்து சிவந்த மண்ணிலே
விடிவு மிக நெருங்கும் வேளை
வந்த தென்று முழங்கியே
நெடிய வானில் கொடி யசைய
நின்று வணங்கி தொண்டர்கள்
இடியிடிக்க மழை பொழிய
இணைந்து சென்று வீரர்கள்
முடி யணிந்து தலைவன் புகழ்
முழக்க மிட்டு நின்றனர்.

- விகடகவி.

# எமது நிலையை புரிந்துகொள்ளாத அரசின் போக்கு எங்கு முடியுமோ?

## வெற்றி விழாவில் பொட்டு அம்மான் உரை

பளை,ஏப்.30

விடுதலைப் புலிகளின் நிலையைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாதுள்ள சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் போக்கு எம்மை எந்த நிலைக்கு இட்டுச் செல்லப்போகிறது என்பது எமக்குத் தெரியாது.

நேற்றுமுன்தினம் காலை பளையில் நடைபெற்ற ஆனையிறவு இராணுவப் பெருந்தளத் தகர்ப்பு மற்றும் தீச்சுவாலை முறியடிப்பு வெற்றி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமாகிய பொட்டு அம்மான் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலையை சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். அப்படிப் புரிந்துகொள்ளாமல் அவர்கள் எம்மை எந்த நிலைக்கு இட்டுச் செல்லப்போகின்றார்களோ தெரியாது.

எமது போராளிகளின் அயராத துணிவும் தியாகமும் நாம் இந்த விழாவைக் கொண்டாட ஏதுவாக அமைந்துள்ளது. இந்த ஆனையிறவுத் தளத் தகர்ப்புக்கு வேண்டிய போரியல் நடவடிக்கைகளை மிகவும் நுட்பமாக மேற்கொள்வதற்கு எமது தலைவர் நீண்டகாலத்தைச் செலவிட்டார், இதனால் அவர் தன்னுடைய நாளாந்த பணிகளைக் கூட நிறுத்தி வைத்து இத்தளத் தகர்ப்பிற்கான திட்டத்தைத் தீட்டுவதில் ஈடுபட்டார். இதன்மூலம் நாம் பல்வேறு இராணுவ ரீதியிலான வெற்றிகளைக் குவித்தோம். தலைவர் எமது இராணுவத்தல் இராணுவத் தந்திரோபாயங்களையும் போரியல் மாற்றங்களையும் ஏற்படுத்தினார்.

மிகப் பெரிய இராணுவத்தளமான ஆனையிறவு இராணுவ முகாம் 80சதுர மைல் பரப்பளவையும் 40 ஆயிரம் படையினரையும் கொண்டிருந்தபோதே நாம் அதை வெற்றி கொண்டோம். முன்னர் ஆயிரம் படையினருடன் அது இருந்தபோது நாம அதை வெற்றிகொள்ளவில்லை. இந்த வெற்றிக்குக் காரணம் எமது தலைவரின் இராணுவ ரீதியான சிந்தனை நெறிப்படுத்தலே. இனவாதிகள் எமது விடுதலைப் போரின் நியாயத்தைப் புரிய மறுத்தமைதான் எமது இந்தப் பெரு வெற்றிக்குக் காரணம்.

இந்த இராணுவத்தளத்தைத் தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட ஒவ்வொரு போராளியும் அர்பணிப்புடனும் துணிவுடனும் செயற்பட்டார்கள் என்பது உண்மை. எமது மக்களின் வியர்வையும் கண்ணீரும் போராளிகள் சிந்திய இரத்தமும் எம்மைத் தொடர்ந்தும் பலப்படுத்தி வருகின்றது - என்றார் பொட்டு அம்மான். (ஒ-8-31)

## போராளிகளோடு இணைந்து நின்று

# ஆனையிறவுத்தளத்தை மீட்ட பெருமை மக்கள் படையையும் சார்ந்து நிற்கிறது!

## அரசியற்றுறைத் துணைப்பொறுப்பாளர் பெருமிதம்

பளை,ஏப்.30

ஆனையிறவுத் தளத்தை விடுதலைப் புலிகளுடன் இணைந்து நின்று மீட்ட பெருமை எல்லைப்படையாக - கிராமியப் படையாக - செயற்பட்ட மக்கள் படைக்கட்டுமானங்களையும் சார்ந்து நிற்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்.

ஆனையிறவு இராணுவப் பெருந்தளத் தகர்ப்பு மற்றும் 'தீச்சுவாலை' படை நடவடிக்கை முறியடிப்பு ஆகிய வரலாற்று வெற்றிகளைக் கொண்டாடும் பெருவிழாவில் தலைமையுரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பளைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்பெருவிழாவில் தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றிகொண்ட மூன்றாம் ஆண்டினை நிறைவு செய்யும் நிகழ்வில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். அத்துடன் இந்த ஆனையிறவை மீட்பதற்காக பெரும் எடுப்பில் 'தீச்சுவாலை' என்ற இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்கா அரச படைகள் நிகழ்த்தியதை முறியடித்து இன்று இரண்டாவது ஆண்டாக இங்கு நாம் எல்லோரும் இந்த வெற்றிப் பெருவிழாவில் கலந்துகொண்டிருக்கின்றோம்.

280 வருடங்களுக்கு மேலாக ஆனையிறவுத் தளமானது அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்களாலும் ஸ்ரீலங்கா அரச படைகளின் ஆக்கிரமிப்புக்களாலும் மிகப்பெரிய முழுமையான பலத்தைக் கொண்டு அமைந்திருந்தது என்பது எமது தமிழீழ தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களாகிய உங்களுக்கு நன்கு தெரியும்.

ஆனையிறவு மீட்பிற்காகவும் 'தீச்சுவாலை' முறியடிப்புச் சமருக்காகவும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட எங்கள் மாவீரர்கள் இந்த மண்ணிலே உரமாகி இருக்கிறார்கள். அவர்கள் சிந்திய குருதியின் மேலும் தசைப் பிண்டங்களின் மேலும் இங்கு ஒரு பெரும் வெற்றிவிழாவினை நிகழ்த்திக்கொண்டிருக்கிறோம் என்பதினை தமிழீழ மக்கள் அனைவரும் உங்கள் நெஞ்சங்களில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனையிறவுத்தளம் மீது நாம் தாக்குதலை மேற்கொண்ட போது யாழ் குடாநாட்டில் இருநது பெருந்திரளான மக்கள் அணி திரண்டு ஆனையிறவை மீட்கின்ற நடவடிக்கைக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கினார்கள். வன்னி பெருநிலப்பரப்பிலும் மக்கள் இணைந்ததால் அன்று ஒரு பெரிய சக்தியாக நாங்கள் கடல், வெளி, ஆகாயச் சமரினை நிகழ்த்தியிருந்தோம்.



இன்று எல்லைப்படையாக, கிராமியப் படையாக, மக்கள் படைக் கட்டுமானங்களாக எங்கள் போராளிகளோடு இணைந்து ஆனையிறவு மீட்பைப் பெற்றுத்தந்த பெருமை எங்கள் தேசமக்கள் எல்லோரையும் சார்ந்து நிற்கிறது என்பதை நாங்கள் இன்று உலகிற்குப் பறைசாற்றிக் கொள்வோம். இந்த வெற்றியை நாம் எல்லோரும் இணைந்து பெரும் வெற்றி விழாவாக இந்த மைதானத்தில் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற இந்த நிகழ்வு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே, இந்த ஆனையிறவு வெற்றிச் சமர் மற்றும் 'தீச்சுவாலை'. முறியடிப்பு ஆகியவற்றின் பெருவிழாவில் கலந்து கொண்டிருக்கும் எம் உறவுகளே! எமது இனம் சுதந்திர விடுதலைக்காக, தமது தாயக மீட்புக்காக பெரும்போரை நிகழ்த்தி இன்று சமாதானம் என்கின்ற ஒரு நடவடிக்கையில் நகர்ந்து கொண்டிருக்கிறது. சர்வதேசம் இன்று எம்மை உற்று நோக்கி இந்த விடுதலைப் போராட்டத்தின் பலத்தையும் எமது சக்திகளையும் தீர்மானித்துக்கொண்டிருக்கின்ற இவ்வேளையில், பெரும் திரளான எமது தமிழீழ மக்கள் இணைந்து நிகழ்த்தும் இந்நிகழ்வை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் ஒவ்வொரு வெற்றிகளிலும் எமது மக்களும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படையணிகளும் எவ்வளவு பலமாக நின்று இத்தேசத்துக்குப் பெருவெற்றியை ஏற்படுத்தினார்களோ அவை போன்று இன்றைய சமாதானச் சூழலின் காலப்பகுதியிலும் எமது படை பலத்தினை நிர்ணயிக்கின்ற பெரும் சக்திகளாக நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று இப்பெருவெற்றி விழாவில் கேட்டுக்கொள்கிறோம்.

எல்லோரும் ஒன்றுசேர்ந்து மிகப் பலமான சக்திகளாக உலகத்துக்கு எங்கள் பலத்தைக் காட்டவேண்டும். தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் அணி திரண்டு தாயக மண்ணின் விடுதலையைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து மக்களும் ஒன்றுசேர்ந்து பலம்மிக்க சக்தியாக மிளிரவேண்டும் - என்றார் சோ.தங்கன். (ஒ-8-10-31)

### நாளை

சித்திரை 18
வியாழக்கிழமை
01.05.2003
திதி : அமாவாசை
மாலை 6.15 வரை
நட்சத்திரம் : அச்சுவினி
முற்பகல் 11.12 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம் : 7.27 - 8.27
[illegible] : 1.27 - 2.27
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உங்களிடம் குறைகளே இல்லை என்று நினைப்பதால் மேலும் ஒரு குறை அதிகரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

3L மொடல் டொல்பின் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: 134, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 5145. (17360)

TaTa 1210 1/2 Body Lorry 42தொடரிலக்கமுடையது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17261)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து உங்களுக்கு தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (17257)

### திருமண சேவை

1971ஆம் ஆண்டு, அவிட்டம் 2ஆம் பாதம், 7இல் செவ்வாய், C.I.M.A கணக்காளராக London இல் தொழில் புரியும் ஆணிற்கு விஞ்ஞான, வர்த்தக, பட்டதாரிப் பெண் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(17333)

சீதனம் கொடுத்து திருமணம் செய்ய முடியாதிருப்பவர்கள், சீதனம கொடுத்து செய்யக்கூடியவர்கள் ஆணகள், பெண்கள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ இருப்போர் நேரிலோ தபால மூலமோ தொடர்புகொள்ளலாம். உள்நாட்டு, வெளிநாட்டு விவரங்கள் உள்ளன. செல்லம்மா திருமணசேவை, கிழான் சங்கத்தடி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம் T.P.01 422619, 0777-047145, 0777- 047314 (16900)

1958, அச்சுவினி, செவ்வாய் 1 கௌரவ குடும்பம், லண்டன் கொம்பியூட்டர் இஞ்சினியருக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. மணமக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய நாடுங்கள்: துரை விமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (17114)

### மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, படித்த 1970 இல் பிறந்த செவ்வாய் தோஷமற்ற புனர்பூசம் நட்சத்திரமும் 20இல்பாவமுமுடைய கனடாவில் தொழில் புரியும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகம், படத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: வி.இல. 1873, C/o உதயன்.(17366)

### வாடகைக்குண்டு

சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த சட்டத்தரணியும் தற்போது இளைப்பாறிய மேலதிக நீதிவானும், மேலதிக நீதிபதியும் ஆகிய சிவகுரு சுரேந்திரனின் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. தொடர்பு: திரு.சி. சற்குணநாதன் (B.M.C) 16, கண்டி வீதி, சாவகச்சேரி. (17260)

### வீடு விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்னால் செல்லும் வீதியில் 3 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 222 5967. (17335)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 08-05-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும். அத்துடன் சிவப்பு சேவற் குஞ்சுகளும் உண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17256)

**N.C.A. கல்வி நிறுவனம**

சாரையடி, பருத்தித்துறை

**O/L DAY CLASS**

ஆரம்பமாகிவிட்டது. (17225)

**தேவை**

ஆங்கில அறிவுடைய மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.

**புதிய குறிஞ்சி மருந்தகம்**

பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி.

(மாணவர் பேரவை முன்பாக)

(சி-27621) T.P.: 222 5238

# 'யுனிலிவர்' நிறுவனம் புனரமைத்த சிறுவர் வார்ட்டின் திறப்பு விழா

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம்,ஏப்.30

'யுனிலிவர்' நிறுவனத்தின் 'பியர்ஸ்' அன்புக் கரங்கள் திட்டத்தின கீழ் யாழ்.வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட சிறுவர் வார்ட் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்போதனா வைத்தியசாலையின குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.மோரல் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் 'யுனிலிவர்' நிறுவனத் தலைவர் அசான் மாலிக் புனரமைக்கப்பட்ட வார்ட்டினை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டுச் சிறுவர்களுக்காக 'பியர்ஸ்' அன்புக் கரங்கள் திட்டத்தின் மூலம் புனரமைத்துக் கொடுப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும 'பியர்ஸ் பேபி' பொருள்களின் வருமானத்தில் 25சதவீதம் அன்புக்கரங்கள் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிறது. இதன் மூலம் ஒரு வருடத்திற்கு 80லட்சம் ரூபா என்ற அடிப்படையில் நான்கு பகுதிகளாகப் பிரித்து நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் உள்ள சிறுவர் வார்ட்டுக்களை புனரமைப்புச் செய்வதற்கு முயற்சி செய்து வருகின்றோம்.

இலங்கை சிறுவர் பாதுகாப்புக் கல்லூரியின் ஆலோசனைப்படி அவர்களால் முன்னுரிமைப்படுத்தப்படும் வைத்தியசாலைகளின் சிறுவர் வார்ட்டுக்கள் புனரமைக்கப்படுகின்றன.


இதன் முதற்கட்டமாக கொழும்பிலுள்ள வைத்தியசாலையின் சிறுவர் வார்ட்டினை புனரமைப்புச் செய்துள்ளோம். அதற்கு அடுத்த கட்டமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் இப்பகுதியை புனரமைத்துள்ளோம்.

வடபகுதியில் எமது பணி முதற் கட்டமாக இங்கு மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் இதுபோன்ற சேவைகளை ஏனைய பகுதிகளிற்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

முன்னதாக மங்கள விளக்கினை யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகம் , நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.பத்மநாதன், யுனிலீவா நிறுவனத் தலைவர் அசான் மாலிக் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

சிறுவர் வார்ட்டுக்கென கணனி ஒன்றும் ஒருதொகுதி வைத்தியசாலை உபகரணங்களும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டன. அத்துடன், 'யுனிலிவர்' நிறுவனத்தின் தயாரிப்புப் பொருள்கள் சிறுவர் வாாட்டில் தங்கிநின்று சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மருத்துவ மாணவர்கள் வைத்தியசாலையின் உயர் அதிகாரிகள், வைத்தியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-5)



யுனிலிவர் நிறுவனத் தலைவர் அசான் மாலிக் சிறுவர் வார்ட்டின் திறப்புவிழா நினைவுக் கல்லை திரைநீக்கம் செய்வதையும் புனரமைக்கப்பட்ட வார்ட்டையும் படங்களில் காணலாம். (படங்கள்: வசந்த்)

## 10குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.30

'நியாப்' திட்டத்தின் கீழ் யாழ்குடாநாட்டில் மேலும் 10குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே 10குளங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும்-

அதனைத் தொடர்ந்து இந்த வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும்-

'நியாப்'திட்டத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புனரமைக்கப்படவுள்ள 10குளங்களின் விவரங்கள் வருமாறு:-

விராச்சிகுளம்(உடுப்பிட்டி), கிராயகுளம்(உடுப்பிட்டி), துலாவிக்குளம் (இமையாணன்), தாளங்குளிக்குளம் (கரவெட்டி), வேரகனிக்குளம் (துன்னாலை), தாமரைக்குளம்(துன்னாலை), ஒன்திரயாக்குளம் (அத்தாய்), சாளம்பைக்குளம்(குடத்தனை), சிலித்தில் குளம்(துன்னாலை), கொட்டுக் கேணிக்குளம்(புலோலி) (ஒ-10-185)

**சுஷானி மொபைல்ஸ்**

**(SUZANY MOBILES)**

- **Mobile Phone Unlocking Repairing**

கணனி திருத்துதல், கணனி மென்பொருள் ஏற்றிக்கொடுத்தல், கணனி கிறபிக் டிசைனிங் செய்து கொள்ளலாம்.

*விவரங்களுக்கு:*

0777 - 631103

0777 - 892236 (17361)

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய அல்லது நாளாந்தம் வந்து போகக்கூடிய பணிப் பெண் தேவை.

*தொடர்பு:-*

T.P.071 - 347564 (17359)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யாழ்.பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது உபவேந்தராக பெறுப்பேற்றுள்ள*

பேராசிரியர்

**சுப்பிரமணியம் மோகனதாஸ்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பதவிக் காலத்தில் யாழ்.பல்கலைகழகம் பல்வேறு உயர்வுகளை அடையவும எமது பாதுகாப்புத் திணைக்களத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக சிறப்புடன் பணியாற்றவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (17375) பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தினர்.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 - 06 - 1971



உதிர்வு 08 - 05 - 2002

### திருமதி சாந்திமலர் லிங்கேஸ்வரன்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 28-04-2003 திங்கட் கிழமை சமரபாகு கரும்பியோடை வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

லிங்கேஸ்வரன் (கணவர்)

மலர்விழி, துர்க்கா (பிள்ளைகள்)

கரும்பியோடை,
வல்வெட்டித்துறை. (17215)

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 10 - 09 - 1933



மறைவு 30 - 03 - 2003

### அமரர் சிதம்பரப்பிள்ளை முருகேசபிள்ளை

(B.A. (LOND) S.L.A.S., JUSTICE OF PEACE)

RETIRED ASST.GOVT.AGENT,

KOPAY, POINT PEDRO

30.03.2003 அன்று சிவபதமடைந்த எமது இல்லத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (01.05.2003) வியாழக்கிழமை நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'வடலிப்பாதி,
தும்பளை, பருத்தித்துறை. (17370) குடும்பத்தினர்.

## புதிய - ஜனநாயக கட்சியின் மாபெரும் புரட்சிகர மேதினக் கூட்டம்

இடம்: யாழ். ப.நோ.கூ. சங்க மண்டபம் (முற்றவெளிக்கு அருகில்)

காலம்: 01-05-2003 வியாழன் காலை 10 மணிக்கு

தலைமை: தோழர் கா.கதிர்காமநாதன் (வடபிரதேச செயலாளர்)

உரையாற்றுவோர்

தோழர்கள்:

- ☆ சி.கா.செந்திவேல் (பொதுச் செயலாளர்)
- ☆ மு.தியாகராசா
- ☆ சோ.தேவராஜா (சட்டத்தரணி)
- ☆ க.ஆனந்தகுமாரசாமி
- ☆ க.தணிகாசலம் (தாயகம் ஆசிரியர்)
- ☆ பொ.முருகேசு
- ☆ கா.பஞ்சலிங்கம
- ☆ சி.நவரத்தினம்

மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் வருக!

407, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (17372) புதிய ஜனநாயகக் கட்சி.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகலிங்கம் புஷ்பராணி

பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகலிங்கம் புஷ்பராணி 2003-04-28 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் கணேசலிங்கம் (தபாலகம், பண்டத்தரிப்பு), சண்முகலிங்கம் (ஜேர்மனி), வாசுகி (சுவிஸ்), சத்தியலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் பாலகுமாரி, சசிகலா (ஜேர்மனி), கிருஷ்ணகுமார்(சுவிஸ்), யாமளசுந்தரி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தபஸ்வினி, சுபாங்கினி, சதுர்ராஜன், மிதுர்ஜா, சதுர்த்திஜியன், திவிர்தன், கௌமேதகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், செட்டிகுறிச்சி இல்லத்தில் நாளை (01.05.2003) வியாழக்கிழமை காலை 8.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சம்பில்துறை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செட்டிகுறிச்சி,*
*பண்டத்தரிப்பு.* (17367) தகவல்: நா.கணேசலிங்கம் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இப்போது படகுகளில் செல்கின்றீர்கள்

# ஆனையிறவை மீட்டுவிட்டு ஏ-9 பாதை வழியே

# திரும்ப வேண்டுமென வழியனுப்பினார் தலைவர்!

## பளை வெற்றி விழாவில் கேணல் பானு உரை



பளை,ஏப்.30

இப்போது படகுகளில் செல்கிறீர்கள், ஆனையிறவுத் தளத்தை மீட்டுக்கொண்டு நீங்கள் ஏ-9 பாதை வழியே திரும்பவேண்டும் என்று கூறி போராளிகளை வழியனுப்பினார் தேசியத் தலைவர்.

பளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆனையிறவுத் தளத் தகர்ப்பு மற்றும் 'தீச்சுவாலை' முறியடிப்பு வெற்றி விழாவில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் பானு இதனைத் தெரிவித்தார்.

ஆனையிறவு மீட்புச் சமர் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆனையிறவு மீட்பு வெற்றிச் சமரின் மூன்றாவது ஆண்டினையும், தீச்சுவாலை முறியடிப்புச் சமரின் இரண்டாவது ஆண்டினையும் அன்று இரத்தம் தோய்ந்த களத்தின் மத்தியில் நின்று, நாம் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த வெற்றிகளைப் பெற்றுத் தந்த போராளிகளின் தியாகத்தின் நிழலில் நின்று இந்த விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். அந்த ஒப்பற்ற தியாகிகளின் மூலம் பெற்ற சொந்தப் பலத்தில் நின்று சிறப்பாக இந்த விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் நாம் பல இராணுவ வெற்றிகளையும் பல இராணுவச் சாதனைகளையும் ஈட்டியிருந்தபோதும் ஆனையிறவுப் படைத்தள வெற்றியானது தமிழினத்துக்குக் கிடைத்த பெரு வெற்றியாகவும் தமிழினத்தின் இராணுவ சாதனையுமாகவே நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏனெனில், எமது தாயகப் பகுதியின் மையப்பகுதியில் அமைந்திருந்த ஆனையிறவுப் படைத்தளமானது தமிழினத்தின் ஆக்கிரமிப்புச் சின்னமாகவும், ஆதிக்க வெறியின் குறியீடாகவுமே இருந்து வந்தது.

ஆனையிறவு முகாம் தகர்ப்பின் வெற்றியானது பல ஆண்டுகளாக எம் தாயக மண்ணில் இருந்துவந்த ஆக்கிரமிப்பு சின்னத்தை தகர்த்த பெருமைதருகின்ற நிகழ்வாகவும் அமைகின்றது.

### பெறுமதிமிக்க இழப்புகள்

ஆனையிறவுத் தளம் மீது எம்மால் தொடுக்கப்பட்ட சமர் தொடக்கம் முற்றுமுழுதாக இந்தப் பெருந் தளத்தை வெற்றிகொள்ளும் வரைக்கும் வரலாற்றில் மறக்கமுடியாத - பெறுமதிவாய்ந்த - தளபதிகளையும் போராளிகளையும் மக்கள் படையினரையும் நாம் இழந்துள்ளோம். இந்த வீரர்களின் ஈடு இணையற்ற உடல் உழைப்பாலும், வியர்வையினாலும் உயிர்த்தியாகத்தினாலும் பெற்றுக் கொண்ட வெற்றியாக ஆனையிறவுப் பெருந்தள வெற்றி அமையப் பெற்றது என்பதை தமிழினம் மறந்துவிடக்கூடாது.

'ஓயாத அலைகள் - 3 ' நடவடிக்கையின் மூலம் 'ஜெயசிகுறு' நடவடிக்கையின்போது எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தை குறுகிய நாள்களில் மீட்கக்கூடிய திட்டத்தை வகுத்து அதில் வெற்றி கண்ட எமது தலைவர், அடுத்ததாக ஆனையிறவுத் தள மீட்புக்கான திட்டத்தை வகுத்தார். ஆனையிறவு மீது அவர் குறி பதியப்பட்டது.

இந்த ஆனையிறவுத் தளத்தை வெற்றி கொள்வதற்காக தலைவர் வகுத்த போர் வியூகம் பற்றி சில வற்றைக் கூறவேண்டும்.

நாம் ஆகாய வெளிச் சமர் மூலம் முன்னர் போர் தொடுத்தபோது தளம் இரண்டு சதுரமைல்கள் பரப்பளவைக் கொண்டதாக இருந்தது. பின்பு இந்தத் தளம் விஸ்தரிக்கப்பட்டு எண்பது சதுரமைல் பரப்பளவைக் கொண்ட பாரிய தளமாகியது. இந்தப் பெருந் தளத்தைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு தலைவரின் வியூகம் எப்படி இருந்தது? தலைவர் இத்தளத்தைக் கைப்பற்றிக்கொள்வதற்கு எப்படி அயராது உழைத்தார்? என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

### போர் வியூகம்

இத்தளம் மீதான முதற்கட்டத் தாக்குதல் தொடுக்கப்பட்டபோது - அதாவது 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையின் - 'கட்டம் 3' - வட போர்முனை ஆரம்பிக்கப்பட்டது. தலைவரின் திட்டத்தின்படி, இத்தளத்தைக் கைப்பற்ற முதலில் தளத்தைச் சூழவுள்ள பிரதேசங்களை ஊடறுத்து தளத்தை முற்றுகைக்குள் கொண்டுவர வேண்டும். இத்திட்டப்படி 'ஓயாத அலைகள் - 3' நடவடிக்கையின் கீழ் மூன்று முனைகள் திறக்கப்பட்டன.

இதன்படி, ஒருமுனை கட்டைக்காட்டில் திறக்கப்பட்டது. அடுத்த முனை பரந்தன் பகுதியில் திறக்கப்பட்டது. அடுத்த முனை திசைதிருப்பும் நோக்கில் தனங்களப்பு, அரியாலைப் பகுதியில் திறக்கப்பட்டது.

அன்று ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதல் மூலம் கட்டைக்காட்டுப் பகுதியால் முன்னேறிய அணிகள், கட்டைக்காடு, முள்ளியான், புல்லாவெளி, ஆழியவளை, உடுத்துறை ஆகிய பகுதிகள் அடங்கிய பெரும் பகுதியைக் கைப்பற்றின.

பரந்தன் பகுதியால் முன்னேறிய அணி உமையாள்புரத்தைக் கைப்பற்றியது. தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் எம்மால் கைப்பற்றப்பட்டு, அந்தப் பகுதிகளில் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு, போராளிகள் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

அந்தப் பகுதிகளில் எதிரியால் பல இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. அந்த நடவடிக்கைகள் எமது படைப்பிரிவுகளால் முறியடிக்கப்பட்டன. முன்னேறிய படைகளுடன் உக்கிரச் சண்டைகள் இடம்பெற்றன. எதிரி சில பகுதிகளைக் கைப்பற்றினான். பின்னர் நாம் அந்தப் பகுதிகளை மீட்டுவிட்டோம்.

பெரும் இறுக்கத்தின் மத்தியில் - போராளிகளின் அர்ப்பணிப்புக்களின் மத்தியில் - ஆனையிறவுத் தளம் மீட்கப்பட்ட செய்தி சகலருக்கும் செல்லவேண்டும் என்பதற்காக இந்த விவரங்களை வெளியிடுகின்றேன்.

படைத்தளம் முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் முகாமை எமது கைகளுக்குள் வீழ்த்த 'கட்டம் 4' திட்டத்தை தலைவர் தயாரித்து வழங்கினார்; அதற்கான வியூகங்களை வகுத்துத் தந்தார்.

### தலைவரின் வழிகாட்டல்

இந்த நடவடிக்கையை ஆரம்பிக்க முன்னர் அதில் பங்குபற்றும் அணிகளுக்குரிய பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் தலைவர் வழங்கிக்கொண்டிருந்தார். அவர்களுடன் நேரடியாகத் தலைவர் நின்று பயிற்சிகளை வழங்கினார். தலைவர் என்று கருதாமல் எம்முடனேயே இருந்து அந்தப் பயிற்சிகளைத் தந்து எம்மைத் தயாராக்கினார்.

'கட்டம் 4' நடவடிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்க 'தரையிறக்கம்' நடவடிக்கை மூலம் ஆரம்பமாகியது. தலைவரின் திட்டப்படி ஓர் அணி தரையிறக்கப்பட்டு, இரகசியமாக ஊடுருவி ஆனையிறவுத் தளத்துக்குச் செல்லும் விநியோகத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும். இன்னோர் அணி தரையிறக்கப்பட்ட அணிகளுக்கு தரைவழிப்பாதையை ஏற்படுத்தி, விநியோகப் பாதையை உருவாக்க வேண்டும்.

பயிற்சிகள் முடிந்து போராளிகள் சண்டைக்குச் செல்லத் தயாராகிய போது, தலைவரால் வழியனுப்பும் வைபவம் நடத்தப்பட்டது.

அந்தச் சந்திப்பில் தலைவர், "உங்களைப் படகுகள் மூலம் கொண்டுபோய் தரையிறக்குவோம். ஆனால், மீண்டும் நீங்கள் திரும்ப படகு வராது. நீங்கள் ஆனையிறவுத் தளத்தை வெற்றிகொண்டு கண்டி வீதியூடாகவே என்னிடம் வந்து சேர வேண்டும்." - என்று அணிகளிடம் தெரிவித்தார். "நாங்கள் கண்டி வழி ஊடாகத்தான் வருவோம். உங்கள் திட்டத்தை நிறைவேற்றுவோம்." என்று போராளிகள் தலைவருக்கு உறுதி கூறினர்.

அந்தப் போராளிகளின் அன்றைய அந்த உறுதிப்பாடு, உறுதிமொழி தலைவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அந்தச் சந்திப்பு முடிந்தவுடன் அணிகள் புறப்படத் தயாராகின. கடற்புலிகளின் தரையிறக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியது.

ஆயிரத்து 200 போராளிகள் தரையிறக்கப்பட்டனர். வெற்றிலைக்கேணியில் இருந்து குடாரப்புப் பகுதி நோக்கிப் படகுகள் விரையத் தயாராகின. முதலாம் கட்டத் தரையிறக்கும் நடவடிக்கையில், முதலாவது படகுத் தொகுதி குடாரப்புப் பிரதேசத்தை நோக்கிச் சென்றது. பின்னர் அடுத்த தொகுதி செல்லத் தயாராகியது. அப்போது கடலில் சண்டை. ஸ்ரீலங்கா கடற்படை அணியுடன் எமது கடற்படை அணி மோதியது. எமது கடற்படை அணியில் ஓர் அணி மோதியது, மற்றைய அணி தொடர்ந்தும் தரையிறக்கும் பணியில் ஈடுபட்டது.

ஸ்ரீலங்கா கடற்படையின் கப்பல்களில் இருந்து 'ஷெல்கள்' பறந்து வந்தன. எமது படகுகளில் இருந்து 'ஷெல்கள்' சீறின. கடும் சண்டை நடந்தது.

இந்தநிலையிலும், தாக்குதல் படையணிகள் தொடர்ந்து தரையிறக்கப்பட்டுக்கொண்டிருந்தன. அதே நேரம் தரையிறங்கிய போராளிகள் தரையில் முன்னேறிச் சென்றனர்.

### ஆட்லறி தளம் தகர்ப்பு

இவ்வாறு ஒருபுறம் தரையிறக்கம் நடந்து கொண்டிருக்க, மறுமுனையில் பளையில் இந்த இடத்தில் அமைந்திருந்த 'ஆட்லறி' தளம் கரும்புலிகளால் தகர்க்கப்பட்டது. இந்த ஆட்லறி தகர்ப்பின் மூலம் தரையிறங்கும் அணிகள் இலகுவாக தங்களது திடடத்தை செயற்படுத்தமுடியும் என்பதே தலைவர் வகுத்த வியூகமாகும். அத்திட்டப்படி, குறித்த நேரத்தில் அந்த ஆட்லறி தளம் தாக்கி அழிக்கப்பட்டது. தரையிறக்கப்பட்ட அணிகள் குடாரப்பில் இருந்து சிறுகடல் நீரேரி ஊடாக கண்டிவீதியை வந்தடைந்தன. அங்கு வந்தடைந்து, கண்டி வீதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அங்கே உடன் நிலைகளை அமைத்தன.

கடலிலே படகுமூலம் தரையிறக்கப்பட்ட அணிகள், குறிப்பிட்ட தூரம் நடந்துசென்று பின்னர் சிறுகடல் நீரேரி ஊடாக பெரும் ஆயுத வெடிமருந்து சுமைகளுடன் கண்டிவீதியைக் கடந்துள்ளன.

தரையிறங்கிய படை அணியில் பீரங்கி படையணிகள், எல்லைப்படை அணிகள், சிறப்பு எல்லைப் படை அணிகள், காவல்துறை அணிகள் என இடம்பெற்றிருந்தன. தரையிறக்கப்பட்ட அணிகள் முன் குறிப்பிட்டபடி கண்டி வீதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, ஆனையிறவுக்கான விநியோகத்தை தடுத்து நிறுத்தின. அந்தப் பாதையில் நாம் வகுத்திருந்த வியூகத்தை உடைப்பதற்கு எதிரி பல தடவைகள் முயற்சி மேற்கொண்டான்.

தளபதி பால்ராஜ் அந்தத் தாக்குதல் வியூகத்துக்குள்ளேயே இருந்து கொண்டு தாக்குதல் அணிகளை வழி நடத்தினார். புதிய புதிய திட்டங்கள், புதிய புதிய தந்திரோபாயங்கள், ஒட்டுமொத்தமான முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டி எமது வியூகத்தை உடைக்க எதிரி பல தடவைகள் முயற்சித்தான். ஒருதடவை ஸ்ரீலங்கா இராணுவத்தின் முழுப்பலத்தையும் ஒன்றுதிரட்டி, இந்த வியூகத்தை உடைக்க பெரும் தயார்ப்படுத்தலை எதிரி மேற்கொண்டான். இத்தயார்ப்படுத்தலின்பின், முன்னேறி வந்தான் எதிரி. முன்னேறிய சமயம், அவர்களுக்கு ஒரு நப்பாசை வந்தது. அந்த வியூகத்திற்குள் உள்ள போராளிகளை, தளபதிகளை உயிருடன் பிடிக்கவேண்டும் என்பதே அந்த நப்பாசை. எப்படியாவது எமது வியூகத்தை உடைத்துவிடுவோம் என்ற நம்பிக்கைதான் இந்த நப்பாசைக்குக் காரணம்.

### எதிரியின் நம்பிக்கை

இந்த வியூகத்தை உடைத்து ஆனையிறவுக்கான விநியோகத்தை சீராக்கிவிடுவோம் என்று எதிரி முழுமையாக நம்பினான்.

எதிரி இந்த நம்பிக்கையுடன் சமரை ஆரம்பித்தான். எமது வியூகத்தில் எல்லாப்பக்கத்தாலும் உள்நுழைந்தான். அந்த வியூகத்தின் பின் பகுதியில் பலத்த சண்டை நடந்தது. அந்தப்பகுதியில் அதிர்ச்சித் தாக்குதல் ஒன்றை எதிரி செய்தான். கனரக வாகனங்கள், விசேடமான பயிற்சி பெற்ற கொமாண்டோ படைப்பிரிவுகள் ஒன்று சேர்ந்து அந்த பெட்டி வடிவிலான எமது வியூகத்தில் இருந்த எமது படையணிகளுக்கு ஓர் அதிர்ச்சித் தாக்குதல் ஒன்றைக் கொடுத்து, வெற்றிகொள்ளும் நோக்குடன் எதிரி முன்னேறினான். அங்கு நின்ற எந்தவொரு போராளியும் அஞ்சவில்லை.

தளபதி பால்ராஜின் உறுதியான கட்டளை அங்கே நேரம் தவறாமல் ஒவ்வொரு பகுதிக்கும் பறந்துகொண்டிருந்தது. போராளிகள் பால்ராஜின் கட்டளைக்கு அமைய திறமையாகச் செயற்பட்டனர். போராளிகளின் உறுதியான செயற்பாடு மற்றும் கலந்துரையாடல்களில் இருந்து எம்மால் அவதானிக்கப்பட்டது என்னவெனில், "நாம் விடமாட்டோம், அந்தப் பகுதியை விடமாட்டோம். பின்னால் ஊடறுத்து நுழைந்த இராணுவத்தை விட்டு வரமாட்டோம்" என்று போராளிகள் உறுதியுடன் தெரிவித்ததைத்தான்.

சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. பின்பகுதியில் இருந்த எமது பீரங்கி நிலைகளை கனரக வாகனங்கள், பவள், கவச வாகனங்கள் சகிதம் படையினர் நெருங்கினர். எமது பீரங்கிகள் முழங்கிக்கொண்டேயிருந்தன.

ஒருகட்டத்தில், எமது பீரங்கி நிலைகளுக்கு மிக அருகில் எதிரி வந்தான். அப்போது அந்த இடத்தின் குறியீட்டை எமக்குத் தெரிவித்து, அங்கே பீரங்கித் தாக்குதலைத் தொடருமாறு கோரினர். எதிரியை அருகில் விட்டு தாங்களும் சண்டையிட்டுக்கொண்டு எதிரி தங்களை நெருங்கிய வேளையிலும் அந்தப்பகுதி நோக்கி 'ஷெல்' தாக்குதலை நடத்துமாறு போராளிகள் பணித்தனர்.

சண்டை தொடர்ந்தது. தங்களுக்குத் தரப்பட்ட அரண்களில் இருந்து வெளியேறாமல் தொடர்ந்து போராளிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். மிக நெருக்கமாக உறுதியாக சண்டையிட்டனர். அங்குள்ள அரண்களில் இருந்த பெண் போராளிகள் மிக நெருக்கமாக எதிரியுடன் சண்டையிட்டனர். இராணுவத்தினருடன் கைகலப்புச் சண்டைகள்கூட ஏற்பட்டன. எமது பெண் போராளிகள் அங்கு உறுதி தளரவில்லை. எதிரியின் ஆயுதத்தைப் பறித்து அவனையே சுட்ட சம்பவங்கள் கூட நடந்தன.

இந்த வியூகத்தில் பெரும் எண்ணிக்கையான பெண் போராளிகள் பங்கு பற்றினர். அந்த வியூகத்தை எதிரியால் உடைக்க முடியவில்லை. தொடர்ந்த சண்டையில் பல தடவைகள் இந்த வியூகத்தை உடைக்க எதிரி முயற்சி செய்தான். அங்கே எதிரியால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஒவ்வொருநாள் சண்டையிலும் எமது காவலரண் உடையும். திருப்பி அதைச் சரிப்படுத்தும்போது எதிரியின் ஷெல்வீச்சு இடம்பெறும். குறிப்பிட்ட ஒருசில நிமிட நேரத்தில் காவலரண் மீண்டும் அமைக்கப்பட்டுவிடும். அந்த நடவடிக்கையில் போராளிகள் துரிதமாகச் செயற்பட்டனர்.

ஒரு பகுதியில் சண்டை நடந்தால், சேதமடையும் காவலரண்களை புனரமைத்து அடுத்தநாள் எதிரியின் நகர்வுக்கு தயாராகிவிட வேண்டும். எதிரி ஒரு நடவடிக்கையை அந்தப் பகுதியில் செய்தானாக இருந்தால், மறுநாள் அந்த இராணுவப் படையணி மாற்றப்பட்டு வேறு ஒரு படையணி அந்தப் பகுதியில் சண்டைக்கு முன்னேறும்.

ஆனால், பெட்டி வடிவில் இருந்த எமது வியூகத்தில் இருந்த போராளிகள் தொடர்ந்தும் தங்கள் பணியைத் தாங்களே செய்ய வேண்டிய நிலை. போராளிகள் உறுதியுடன் அந்தப் பணியைச் செய்தனர். அங்கு மாறிவிடுவதற்கு வேறு போராளிகள் இருக்கவில்லை. முதலில் தரையிறக்கப்பட்ட போராளிகளே அந்த 34நாள்களும் சமரிலே பங்குபற்ற வேண்டியிருந்தது. வீரச்சாவடைந்த - காயமடைந்த - போராளிகள் தவிர ஏனைய போராளிகள் யாவரும் அந்த வியூகத்துக்குள்ளேயே நின்று சண்டையிட்டனர்.

கண்டிவீதியைத் தனது விநியோகப் பாதையாக எதிரியால் திறக்க முடியாத நிலையில், எதிரி கிளாலிப் பதை ஊடாக தனது நகர்வை மேற்கொள்ளத் தொடங்கினான்.

இந்த நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும் போது, அடுத்தடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பான வியூகங்களை தலைவர் கோடுபோட்டுக் கொண்டிருந்தார். அடுத்து எந்த நகர்வை மேற்கொள்ளவேண்டும், எந்தவகையில் மேற்கொள்ள வேண்டும் என்று தலைவர் சிந்தித்து அடுத்த கட்ட நகர்வு குறித்த திட்டத்தை வகுத்தார்.

### இயக்கச்சி ஊடறுப்பு

அதன்படி, இயக்கச்சிப் பகுதியில் ஓர் ஊடறுப்பைச் செய்ய முனைந்தோம். அந்த ஊடறுப்பில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி கிடைக்காததால், அந்த நடவடிக்கையை இடைநிறுத்த வேண்டியிருந்தது.

அதன்பின்னர், மாசார் பகுதியால ஊடறுத்து கிளாலிப் பகுதியை அடைவது எனத் தலைவர் திட்டமிட்டார். அதன்படி, மாசார் பகுதியால் ஊடறுத்து முன்னேறிய அணிகள் கண்டி வீதியைத் தாண்டி கிளாலி கடல் வரை அரண் அமைத்தன.

அதுவரைக்கும் எதிரிக்கு ஒரு பாதை இருந்தது. கிளாலிப்பாதையூடாக விநியோகத்தை எதிரி மேற்கொண்டுவந்தான். கண்டி வீதியை துண்டித்தோம், பின்னர் கிளாலிப் பாதையை துண்டிக்கவேண்டும் என்ற தலைவரின் திட்டமும் நிறைவேறியது.

### பின்வாங்கிய எதிரிப்படை

இதன்மூலம் எதிரிக்கு அதிர்ச்சியான திகைப்பு ஏற்பட்டது. இனி ஆனையிறவுத் தளத்தில் தமது படைகளைத் தக்கவைக்கமுடியாது என்ற நிலைக்கு எதிரி வந்தான். பின்வாங்குவதே புத்திசாலித்தனம் என்ற முடிவுக்கு எதிரி வந்தான். அதன்படி, எதிரி பின்வாங்கத் தொடங்கினான். எதிரி பின்வாங்கும்போது எமது அணியுடன் மோதினான். பெரும் சண்டை மூண்டது. அந்தப் பகுதியில் பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### இறுதித் தாக்குதல்

ஆனையிறவு முகாம் மீது நாம் தாக்குதல் ஆரம்பித்தபோது அங்கே சுமார் 20ஆயிரம் படையினர் இருந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவு மீட்பின் வெற்றிப் பெருவிழா







நேற்றுமுன்தினம் பளையில் இடம்பெற்ற ஆனையிறவுத் தளத் தகர்ப்பு மற்றும் தீச்சுவாலை முறியடிப்பு வெற்றி விழாவின் மாலை நிகழ்வுகளில் தமிழீழக் காவல்துறையின் அணிவகுப்பையும் தலைவர் பிரபாகரனுக்கு சமர்ப்பிக்க யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட வெற்றிக் கேடயத்தை கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை கையேற்பதையும் கடற்புலிகளின் மகளிர் படையணியின் அணிவகுப்பையும் காணலாம்.




ஈழத்தமிழரின் வீரத்தையும் தியாகத்தையும் எதிர்கால உலகுக்கு எடுத்தியம்பப்போகும் இடங்களில் இதுவும் ஒன்று....







'மீண்டும் யாழ்.மண்ணில் பதிந்த எம் தடங்கள்' என்ற நூல் வெளியிடப்படுவதையும் தலைவரிடம் சேர்ப்பிக்க வடமராட்சியிலிருந்து எடுத்துவரப்பட்ட கேடயத்தை தளபதி கேணல் சூசையும், கிளிநொச்சியிலிருந்து எடுத்துவரப்பட்ட கேடயத்தை கேணல் கடாபியும் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரில் காலிழந்த பெண் போராளி உட்பட போராளிகள் வழங்கிய கலைநிகழ்வுகளின் சில காட்சிகளையும் வெற்றி விழாவில் திரண்டிருந்த தமிழினத்தின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தேவா)

# 6 மணித்தியாலங்களில் 42.6 மில்லிமீற்றர் மழை

## குடாநாட்டில் பெய்தது

யாழ்ப்பாணம்,ஏப்.30

யாழ்.குடாநாட்டில் நேற்றுமுன் தினம் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 3 மணி வரை ஆறு மணித்தியாலயத்தில் 42.6 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக திருநெல்வேலியில் உள்ள வானிலை அவதான நிலையத்தின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து நேற்றுமுன்தினம் காலை 9 மணிவரையான 24 மணித்தியாலயத்தில் 0.4 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது என்றும் -

தொடர்ந்தும் மழை பெய்யக் கூடிய காலநிலை காணப்படுவதாகவும்-

அவதான நிலையத்தின் பொறுப்பாளர் வே.புஷ்பநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

தற்பொழுது பெய்துவரும் மழையின் காரணமாக புகையிலைச் செய்கையில ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இவர்கள் புகையிலையை வெட்டி உலர்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால மழையின் காரணமாக அவற்றை உலர்த்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் பெரும் சிரமங்களையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

(எ-10)

# பாலா - சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் பேச்சு

லண்டன்,ஏப்.30

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சொலஹெய்ம் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் நேற்றுமுன்தினம் தொலைபேசியில் உரையாடினார். இன்று அல்லது நாளை சொல்ஹெய்ம் லண்டனுக்கு வந்து பாலாவுடன் நேரடியாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்ட நெருக்கடிகளை அடுத்து பாலசிங்கத்துடன் நோர்வே அனுசரணையாளர்கள் உட்பட அரசியல் பிரமுகர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொள்வதுகூட இயலாததாக இருந்துவந்தது. பல தகவல்களும் தொடர்பாடலகளும் ஈ மெயில் மூலமே இடம்பெற்று வந்தன.

இந்த நிலைமையில், நேற்றுமுன்தினம் தளர்வுப் போக்கு ஏற்பட்டதாகத் தெரிகின்றது. சொல்ஹெய்ம் - பாலசிங்கம் நீண்டநேரம் உரையாடினர்.

(ம)

# மிதிவெடி அபாயம் குறித்து தீவகத்தில் விவரம் சேகரிப்பு

ஊர்காவற்றுறை,ஏப்.30

'ஹலோ ரஸ்' அமைப்பு தீவகத்தில் மிதிவெடி அபாயம் உள்ள பகுதிகளின் விவரங்களைத் திரட்டி வருகிறது.

ஒவ்வொரு பகுதிக்கும் நேரடியாகச் சென்று அங்கு பொதுமக்களுடன் கலந்துரையாடி விவரங்களை அறிந்து கொள்வதுடன் அபாயமுள்ள பகுதிகளில் மிதிவெடி அபாயம் அறிவிப்புப் பலகைகளை இவ்வமைப்பினர் நட்டும் வருகின்றனர்.

ஊர்காவற்றுறையில் பழைய தபாற்கந்தோரடி, கரைச்சி, கிழக்கு தெரு, ஊருண்டி, 8ஆம் கட்டையடி போன்ற பகுதிகள் மிதிவெடி அபாயம் உள்ள இடங்களாகக் கருதப்படுகின்றன.

(ஒ-16)


## இதய அஞ்சலி

### அமரர் நடராசா சிவஞானம்

எமது கல்லூரியில் முன்னாள் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து சிறந்த கல்விப் பணியாற்றி இறைவனடி சேர்ந்த நடராசா சிவஞானம் அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*கல்லூரிச் சமூகம்,*
யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

(17362)




விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் சமர்ப்பிப்பதற்காக ஆனையிறவுத் தளத் தகர்ப்பு வெற்றிக் கேடயம் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுமுன்தினம் பளைக்கு அஞ்சலோட்ட வீரர்கள் சகிதம் எடுத்துச் செல்லப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள்: வசந்த்)*

# வழி வழி வந்த பாரம்பரியங்களே இனங்களின் நலம் பேணுகின்றன



இனங்களின் நலம் பேணுவதும் அவை குலையாது காப்பாற்றுவதும் வழிவழிவாக வந்த அவற்றின் பாரம் பரியங்களாகும். பண்டைக் காலங்களிலிருந்தே ஒவ்வோர் இனத்திற்கும் ஒவ்வொரு குறியீடும், பழக்க, வழக்க, ஒழுக்கநெறிகளும் இருந்து வந்திருக்கின்றன. பண்டிகைகள், விழாக்கள், கொண்டாட்டங்களில் இவை வெளிப்படையாகத் தெரிவதைக் காணலாம்.

நகர மயமாக்கல், குடிசனப் பெயர்வு, பல்லினக் குழுமங்கள் கூடி வாழ்தல், புதுமை மோகம் இன்னோரன்ன காரணங்களால் இன மரபுகள் குன்றிப் போய்வந்துள்ளன. இதனால் தொன்மையான சில இனங்களினதும், குழுமங்களினதும் சீரிய பண்பாடுகள் மண்மூடிப் போயுள்ளன. அகழ்வாராய்ச்சிகள் மூலம் உலகெங்கும் இவை வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன.

எவ்வாறாயினும், நாகரிக மோகத்தில் நனைந்தும் உலர்ந்தும் நலிந்தும் போயிருக்கின்ற இன்றைய நிலையிலும் கட்டுக்குலையாது தத்தமது இன ஒழுக்கங்களைக் காப்பாற்றிப் பேணி வருகின்ற இனங்களும் குழுமங்களும் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக, இலங்கையிலுள்ள வேடுவர் மற்றும் இந்தியாவிலுள்ள நாகர்கள், ஆபிரிக்காவிலுள்ள செவ்விந்தியர் போன்ற இனங்களைக் குறிப்பிடலாம். பெண் கொடுத்தலிலும், பெண் கொள்ளுதலிலும் பண்டைய இனக் குழுமங்களிடையே இறுக்கமான மரபுகள் பேணப்பட்டு வந்துள்ளன.

பண்டைய தமிழ் இலக்கியத்திலே இவ்வாறான ஒரு நிகழ்வை இங்கு இலக்கியச் சுவையோடு தருவது வாசக நெஞ்சங்களுக்கு தமிழச்சுவை விருந்தாக இருக்குமென எண்ணி நூல்படிந்த மனத்தவர்களுக்குப் படையலாக்குகின்றேன்.

**நா.க.சண்முகநாதபிள்ளை**

பாண்டிய அரசிளங்குமரன் ஒருவன் வேட்டையாடுவதற்காக வேடர் வாழும் காட்டுப்பகுதிக்குச் சென்றான். அங்கே வேட்டுவ அரசன் நம்பியின் மகளைக் கண்டு மையல் கொண்டான். ஆனால், அவனின் காதல் கை கூடவில்லை. எனினும், தன் அரண்மனைக்கு வந்ததும் பாண்டிய அரசன் ஓர் ஓலை எழுதித் தூதுவன் மூலம் நம்பி அரசனுக்கு அனுப்பினான். அதில் நம்பி அரசனின் மகளைத் தான் காதலிப்பதாகவும், அவளைத் திருமணம் செய்து தருமாறும் வேண்டினான். இதற்கு வேட்டுவ அரசன் மறுத்ததோடு தன் இன ஒழுக்க மரபைச் சுட்டிக்காட்டி தூதுவனிடமிருந்த ஓலையைக் கிழித்தெறியுமாறு கட்டளையிட்டு விரட்டுகிறான். இதனை இலக்கியம் சுவை ததும்பும் பின் வரும் இருபாடல்கள் விளம்பி நிற்கின்றன.

*"விற்றதார் கலைபாதியோடு*
*வனத்திலே அழவிட்டதார்?*
*வெஞ்சிறைப் புகவிட்டு விழித்ததார்?*
*துகிலுரிய விட்டு விளித்ததார்?*
*உற்றதாரமும் வேண்டுமென்றினி*
*மன்னர் பெண்கொளல்*
*ஒக்குமோ!*
*உமியடா மணமென்ற ஓலைகிழித்து*
*ஓலைக்காற்றில் உருட்டடா"*

*"வெற்றியாகிய முத்திதந்திடும்*
*வேங்கைமாநகர் வேடர்நாம்*
*விமலரானவர் எமையடுத்து*
*இனிது எங்கள் எச்சில்*
*மிசைந்ததால்,*
*பெற்றவேலன் தமக்குயாமொரு*
*பெண் வளர்ப்பினில் ஈய்ந்தனம்*
*பெற்ற பெண்ணைக் கொடுப்பமோ!*
*பேய் பிடித்திடு தூதனே!"*

இந்தப் பாடல்களின் கருத்துரை யாவது:-

"உங்கள் அரசர்களில் ஒருவரான அரிச்சந்திரன் மனைவியை விற்றான், இன்னுமொருவனாகிய நளன் அரைவாசி உடையுடன் தமயந்தியாகிய தனது மனைவியை தனிமையாகக் காட்டிலே அழுகையுடன் அலையவிட்டான். இராமபிரான் தனது மனைவியாகிய சீதையை இராவணன் கவர்ந்துகொண்டுபோக விட்டான். பாண்டவர்கள் தமது மனைவியைச் துச்சாதனன் சபையிலே துகிலுரியக் கண்டும் பேசாதிருந்தனர். இந்த அலங்கோலங்களெல்லாம் நடந்த பின்பும் மீண்டும் தமக்குப் பெண் வேண்டுமென்று ஆசைப்படுவது பொருந்துமா? எனவே நீகொண்டு வந்த ஓலையைக கிழித்துக் காற்றிலே பறக்கவிடு, எங்கள் இனத்தினரான கண்ணப்பர், வாயினால் மென்று கொடுத்த எச்சில் பட்ட இறைச்சியினை விமலரான சிவனார் உண்ட காரணத்தால் அவருடைய மகனார் வேலவனுக்கு வள்ளியாகிய பெண்ணை வளர்த்துக்கொடுத்தோம். நாங்கள் பெற்ற பெண்ணை எங்கள் இனத்தில் உள்ளவர்களுக்கே கொடுப்போமேயன்றிப் பிறருக்குக் கொடுப்பமோ! பேய்த்தனமாக வந்தனையே தூதனே" என வளரும்.

இதேபோல் ஆயர் இனத்தில் உள்ளோரும் தம் இனப் பெண்களைத் தம் இன இளைஞர்களுக்கே கொடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இன்றும் தமிழ்நாட்டில் ஆயர் இனங்களில் 'ஏறுதழுவல்' என்ற நிகழ்ச்சி மூலம் மாட்டுக்காளையை அடக்கிவரும் தங்கள் இன வீரனுக்கே பெண்ணைக் கொடுக்கும் நிகழ்ச்சி நடந்து வருவதை அறியலாம். தமிழ் மறவர் இனங்களிலும் காதலும், வீரமும், கற்பு மணமும் இனப்பற்றையே அடிப்படையாகக் கொண்டு நடந்துவந்தன. இதனால் இன ஒழுக்கங்களும் கட்டுப்பாடுகளும் எல்லைகளை மீறாமல் அதேசமயம் சமூக ஒருமைப்பாட்டையும் வளர்த்தன. மன்னர்களும் "குடி தழீயிக் கோலோச்சினர்."

இந்தச் சிந்தனை வெளிநாட்டவரை மணம் புரிவோரை அமர்க்களமாக்கிவிடும். என்றாலும், அவர்களுடைய சிந்தனைக்கு இது சமர்ப்பணம்.

*"கோடி கொடுத்தும் (தம்) குடிப்*
*பிறந்தார் தம்மோடு*
*கூடுவதே கோடி பெறும்"*
(ஔவையார்)


உலகப் புகழ்பெற்ற இமாமி தயாரிப்புகள் இப்பொழுது...
யாழ்.நகரிலும்!



இமாமி
நேச்சுரல்லி ஃபேயர் பேர்ல்ஸ்

- அசல் முத்துக்களும்
- 11 அரிய மூலிகைகள்

கொண்ட

சிவப்பழகு கிறீம்
பாவிப்பதனால்

- முகப்பரு அடையாளங்கள் கொண்ட சருமம் என்ற கவலை இனி இல்லை
- கண்ணின் கீழ் கருவளையம் இனி இல்லை
- முகத்தில் கரும்புள்ளிகள் இனி இல்லை

அழகிய வெண்மையான மிருதுவான சருமம் 6 வாரங்களில்!

வாங்குவோருக்கு Vitmine & Gell இலவசம்

சந்தைப்படுத்துவோர்:
HARCOURTS(PRIVATE)LTD.
No:14, Station Road,Dehiwala.
T.P: 074 - 200063 074 - 200064



ஹிமானி
GOLD TUMERIC CREAM

- கஸ்தூரி மஞ்சள்
- தங்கத் தூள்
- குங்குமப் பூ
- அரிய மூலிகைகள்

ஆயுர்வேத் கிறீம்

- நச்சுத்தன்மை அகற்றி பொலிவான முகத்தோற்றம்
- என்றும் இளமையான சருமம்
- மாசுமறுவற்ற சருமம்

தங்கத்தூள் அடங்கிய Yell இலவசம்

யாழ்.முகவர்:
JEGHAN PHARMACY
ஜெகன் பார்மஸி
462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021-2222194

(C/27060)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்துடனான முதல் டெஸ்ட்டில் இலங்கை அணிக்கு 483 ஓட்டங்கள்

நியூஸிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 483 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இப்போட்டியின் நான்காவது நாளான நேற்றுமுன்தினம் மதிய உணவு இடைவேளையின் போது இலங்கை அணி 6 விக்கெட்டு இழப்பிற்கு 386 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அதன்பின் சீரற்ற காலநிலை காரணமாக 17 ஓவ்கள் மாத்திரமே விளையாடப்பட்டன. அன்றைய ஆட்ட முடிவின்போது இலங்கை அணி 6 வக்கெட் இழப்பிற்கு 424 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணித்தலைவர் ஹஷான் திலகரட்ன 126 ஓட்டங்களுடனும் குமார் தர்மசேன 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஐந்தாவது நாளான நேற்றுக் காலை ஹஷான் திலகரட்ன 144 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 314 பந்து வீச்சுகளில் 24 பௌண்டரிகளையும் அவர் அடித்திருந்தார்.

8 ஆவது விக்கெட்டுக்காக குமார் தர்மசேனவும் கௌஸ்ய லொக்கு ஆரச்சியும் இணைந்து 39 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆனால், டேனியல் வெட்டோரி நேற்றைய ஆட்டத்தில் தனது மூன்றாவது ஓவரில் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அந்த ஓவரின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் ஆறாவது பந்துவீச்சுகளில் முறையே குமார் தர்மசேன, பிரபாத் நிசங்க, முத்தையா முரளிதரன் ஆகியோர் எல்.பி.டபில்யூ முறையில் ஆட்டமிழந்தனர்.

அதனால் 483 ஓட்டங்களுடன் இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் முடிவடைந்தது. கௌஷல்ய லொக்கு ஆரச்சி 29 பந்து வீச்சுகளில் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களைப் பெற்றார்.

நியூஸிலாந்து பந்துவீச்சாளர்களில் ஷேன் பொன்ட், டேனியல் வெட்டோரி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் வைஸ்மன் இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

நியூஸிலாந்து அணி நேற்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. மதிய உணவு இடைவேளையின் போது விக்கெட் இழப்பின்றி 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தது அவ் அணி.

## நண்பரின் ஜீப்பை அபகரித்தாரென வஸிம் அக்ரம் மீது குற்றச்சாட்டு!

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் வஸிம் அக்ரம், தனது நண்பர் ஒருவரின் 'ஜப்' வாகனத்தை அபகரித்துக் கொண்டார் எனப் பாகிஸ்தான் பொலீஸார் வழக்குப் பதிவுசெய்துள்ளனர்.

தம்மிடமிருந்த 'ஜீப்' ஒன்றை வாங்கிய அக்ரம் அதற்குரிய பணத்தைக் கொடுக்கவில்லை என அக்ரமின் முன்னாள நண்பரான சதாத் ஹயாத் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்னர் பாக்.அணியிலிருந்து நீக்கப்பட்ட அவர், தற்போது இங்கிலாந்தின் ஹம்ப்ஷயர் அணியில் விளையாடிவருகிறார்.

இந்நிலையில் மேற்படி குற்றச்சாட்டுக்களை வஸிம் அக்ரமின் மனைவி ஹுமா மறுத்துள்ளார். இந்த 'ஜீப்' அன்பளிப்பாக வழங்கப்பட்டது என அவர் கூறினார்.

"இதில் ஏமாற்றுவேலைகள் இடம்பெறவில்லை. மூன்று வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது.

"நீண்டகாலத்திற்கு முன்பே நாம் அந்த வாகனத்தைத் திருப்பிக்கொடுக்க விரும்பினோம். ஆனால், அதை ஹயாத் திரும்பப்பெற மறுத்துவிட்டார். அதற்குப் பதிலாக பெருந்தொகைப் பணம் கேட்டார். தற்போது அந்த வாகனம் பொலீஸார் வசம் உள்ளது."

- இவ்வாறு செய்தியாளர்களிடம் ஹுமா கூறினார்.

சட்டவிரோத கையாளல், நம்பிக்கைத் துரோகம் ஆகியவை தொடர்பாக 406ஆவது பிரிவின் கீழ் அக்ரமிற்கு எதிராக வழக்குப் பதிவு செய்யபட்டுள்ளது எனப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பிரிவின் கீழ் குற்றவாளியாகக் காணப்படுபவருக்கு 3 வருட காலம் வரையான சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் அலுவலகம் மாற்றம்

வரணி,ஏப்.30

கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் அலுவலகம் மீண்டும் பழைய இடத்தில் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. வரணிப் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த 52ஆவது படையணியினர் தாம் நிலைகொண்டிருந்த சுமார் பதினைந்து வீடுகளை உரிமையாளர்களிடம் கையளித்துவிட்டு அண்மையில் வெளியேறினர். கிராம உத்தியோகத்தர் அலுவலகம் முன்னர் இயங்கிய வீடும் படையினரின் பாவனையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-170)

## கொழும்புத்துறை கிழக்கில் தும்புத்தொழிலில் ஈடுபட படைத்தரப்பினர் அனுமதி

கொழும்புத்துறை,ஏப்.30

கடந்த 3 வருடங்களாக கொழும்புத்துறை கிழக்குக் கடற்பகுதியில் தும்புக் கைத்தொழிலின் மூலப் பொருளான தேங்காய் மட்டைகளை புதைக்கவும் ஏற்கனவே புதைத்திருந்தவற்றை எடுக்கவும் இராணுவத்தால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

பொது அமைப்புக்கள் தொடர்நது கோரிக்கை விடுத்து வந்ததையடுதது நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை துறைமுகப் பகுதி வழியே உட்சென்று குறிப்பிடட சில பகுதிகளில் மட்டும் மட்டைகளை எடுக்கலாம் எனவும் -

படிப்படியாக ஏனைய இடங்களிலும் தொழிற் செயற்பாட்டை மேற்கொள்ள அனுமதிக்கப்படும் எனவும் -

இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

3 வருடங்களுக்கு மேலாக புதைக்கப்பட்டிருந்த மட்டைகள் மிகவும் உக்கி சேதமடைந்துள்ளதாகவும் -

சிலர் தாம் மட்டைகளை புதைத்த இடத்தை இனங்காண முடியாதுள்ளதாகவும் - கூறப்படுகின்றது.

பல வருடங்களாக தும்புத் தொழில் இன்றி பாதிக்கப்பட்டிருந்த இப்பகுதி மக்கள் தற்போது வீடுகளில் கயிறு, தும்புத்தடி போன்றவற்றைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதை காணமுடிகிறது. (ஒ-30)

## ஜன்னல் கதவைக் கழற்றி நுழைந்து பணமும் நகைகளும் கொள்ளை

### திருநெல்வேலியில் கள்வர் கைவரிசை

வலி.வடக்கு,ஏப்.30

நள்ளிரவு நேரம் வீட்டின் ஜன்னல் கதவைக் கழற்றிவைத்துவிட்டு உட்புகுந்த திருடர்கள் சுமார் ஐந்து லட்சம ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட பணம், நகைகள், உடுபுடைவைகள் உட்பட பல்வேறு பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை திருநெல்வேலி, சிவன்கோயிலின் தெற்கு வீதியில் உள்ள வீடொன்றிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புங்குடுதீவிலிருந்து இடம்பெயர்ந்து வசிக்கும் யாழ்.பல்கலைக்கழக பெண் ஊழியர் செல்வி வ.நாகராசா என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு லட்சம் ரூபா ரொக்கப்பணமும் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பெறுமதிமிக்க துணி வகைகள் மற்றும் பொருள்களும் களவுபோயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

## பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.30

லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவரும் வலி.கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் உபதலைவருமான யு.எல்.ஏ.ரவி படுகாயமடைந்தார்.

நேற்று நீர்வேலிப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. படுகாயமடைந்த யு.எல்.ஏ.ரவி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-5-72)

## ஒத்துழைப்புக் குழுவின் மேதினக் கூட்டம்

தொழிலாளர் ஒத்துழைப்புக் குழுவின் ஏற்பாட்டிலான மேதினக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள 'சிற்றி' மண்டபத்தில் இடம்பெற உள்ளது. (ஒ)

## வீதி பெயர்ப்பலகையால் ஏற்பட்டுள்ள சந்தேகம்

குருநகர்,ஏப்30

யாழ்.குருநகரில் புதிதாக நடப்பட்ட வீதி பெயர்ப்பலகையால் றெக்கிளமேசன் மத்தியகிழக்கு வீதியின் பெயர் றெக்கிளமேசன் வீதி எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வீதிகளின்' பெயர்களைப் பெயர்ப் பலகையில் மும்மொழிகளிலும் பொறித்து நடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வகையில் றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியில் தற்போது அமைக்கப்பட்ட புதிய பெயர்ப் பலகையில் இவ்வீதியின் பெயர் றெக்கிளமேசன் வீதி என்று எழுதப்பட்டுள்ளது.

1950ஆம் ஆண்டு தொடக்கம் றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியின் பெயர் மத்திய கிழக்கு வீதி என்றே குறிப்பிடப்பட்டு வருவதாகவும் -

தேர்தல் இடாப்பு முகவரிகள் என யாவற்றிலும் இப் பெயரே உள்ளது எனவும் -

இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-51)

## கொல்களத்தை இடம்மாற்ற வேண்டுகோள்

அராலி,ஏப்.30

அராலி வீதி, காக்கைதீவில் அமைந்திருக்கும் கொல்களத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு பொது மக்கள் தரப்பிலிருந்து வேண்டுகோள் விடப்பட்டு வருகின்றது.

மேற்படி கொல்களம் வீதி அருகே இருப்பதால் அங்கு கொல்லப்படும் பிராணிகளின் கழிவுகளால் பெரும் துர்நாற்றம் வீசுவதாகவும் -

இவ்வீதி வழியே சென்று வருவோர் இதனால் சிரமப்படுவதாகவும் - சுட்டிக் காட்டப்படுகிறது. (ஒ-14)

## புலிகள் இல்லாத சமயங்களில் மணல் திருட்டு அதிகரிக்கிறது

### அரியாலை மக்கள் முறைப்பாடு

வலி.வடக்கு,ஏப்.30

அரியாலைப் பகுதியில் இரவு நேரங்களில் திருட்டுத்தனமாக மணல் அகழ்பவர்கள் காணி உரிமையாளர்களை பயமுறுத்தி வருவதாகவும் -

விடுதலைப் புலிகள் அதிக எண்ணிக்கையில் வன்னி செல்லும் தினங்களில் மணல் திருட்டு அதிகம் இடம்பெறுவதாகவும் - அப்பகுதியில் உள்ள பொது மக்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர்களிடம் முறையிட்டுள்ளனர்.

நேற்றைய தினம் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைக்கு அண்மையாக மணல் அகழ்வு சம்பந்தமாக உரையாட வந்த யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலாளாகளுக்கு அப பகுதி மக்கள் இந்த முறைப்பாட்டினை நேரில் தெரிவித்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் அரசியற் பணி மேற்கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் வன்னி நோக்கிச் செல்லும் தினங்களில் இரவு வேளைகளில் திருட்டுத் தனமாக மணல் அகழ்வோர், மக்களை பயமுறுத்திவிட்டு மணலை ஏற்றிச் செல்வதாகவும் அபபோது தெரிவிக்கப்பட்டது.

மணல் களவாக ஏற்றப்படும் இடதுக்குச் சென்ற கிராம அலுவலர்கள், வாகனங்களில் மணல் ஏற்றுவோரைப் பிடிக்க முற்பட்ட போதிலும் வாகனங்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (ஒ-86)

## ஓட்டோ விபத்தில் மூவர் காயம்!

வலி.வடக்கு,ஏப்.30

கரவெட்டியில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் வடமராட்சி பகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் ச.அரவிந்தனும் மற்றும் இருவரும் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல லூரிக்கு அண்மையாக எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிடும்போது, மின் கம்பத்துடன் ஓட்டோ மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் அரவிந்தனின் தாயாரும் சகோதரரும் காயமடைந்துள்ளனர். மூவரும் சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ-86)

## சைக்கிள்களுக்கு இலக்கத்தகடு விநியோகம்

சைக்கிள்களுக்கு இவ்வாண்டுக்குரிய இலக்கத் தகடுகளை வழங்குவதில் வலி.வடக்கு பிரதேச சபையின மல்லாகம் உப அலுவலகம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வீதிகளில் செல்லும் சைக்கிள்களை வழிமறித்து பயணிகளுக்கு இலக்கத் தகடுகளின் அவசியத்தை வலியுறுத்தி உடனடியாக இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன. (ஒ-89)


## போதனாசிரியர் தேவை

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள பின்வரும் தொழிற்பயிற்சி நெறிகளுக்கு போதனாசிரியர்கள் தேவை. எனவே தகுதியானவர்கள் சான்றுப் பத்திரங்களுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு 05.05.2003 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலதிக விவரங்களை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் போதனாசிரியர்கள் பயிற்சி நெறி தொடர்பாக கோட்பாடுகள் மற்றும் அவை தொடர்பான செய்முறைகள் என்பவற்றில் பயிற்சி அளித்தல்வேண்டும்.

1. மின் இணைப்புப் பயிற்சி
2. மரவேலைப் பயிற்சி
3. கட்டுமானப் பயிற்சி

(C/27629) பிரதேச செயலர், தென்மராட்சி.



விஞ்ஞான பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இலங்கை.

## அறிவித்தல்

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு (முதலாம் அரையாண்டு) 2003 & 2003 (A)

மேற்படி தேர்வு 26.05.2003 ஆம் திகதி ஆரம்பமாகும்.

மீள் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை அனுமதி விண்ணப்பப் படிவங்களை உரிய கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டுடன் 03.05.2003 ஆம் திகதிக்கு முன்னதாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சை அனுமதி விண்ணப்பப் படிவங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை நடைபெறும் அலகுகளின் விவரத்தையும் நேர அட்டவணையையும் விஞ்ஞான பீட அறிவப்பு பலகைகளில் பார்வையிடலாம்.

பதிவாளர். (C/27628)



UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
DIPLOMA COURSE IN PHYSICAL EDUCATION

Applications are invited from qualified persons who wish to register for the above course in the University of Jaffna.

**Requirements:**

1) Should be in the age group 18-28 years.
2) Should have a minimum of three passes in the G.C.E (A/L).
3) Eligibility to apply for University admission in Sri Lanka and the selection will be made by a written examination and practical assessment conducted by the University. These examinations will be held at University of Jaffna, Thirunel vely only.
4) Should pass the oral examination:

Note: Preference will be given to those candidates who have participated in sports and athletics and won places at District and National Level.

5) The University Senate may relax the age requirement in the case of the candidates who are already in the sports profession in Government and non-Government Sectors.

Course Fee : Rs. 7,500/= per year.

Duration: Two years (Internal -Full Time)

Application forms and handouts could be obtained from the Assistant Registrar /Exams & Admissions Branch, University of Jaffna on a payment of Rs.50/=.Duly filled application forms should be submitted to the "Assistant Registrar/Exams & Admissions Branch,University of Jaffna" on or before 31st of May 2003.

Registrar. (C27625)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரஸ்லேட்டர்



பொதுவாக மொழி பெயர்ப்பாளர்களை ஆங்கிலத்தில் 'ரான்ஸ்லேட்டர்' என்று அழைப்பது வழமை. இதே பணியைச் செய்யும் சிறிய கருவி ஒன்றை அமெரிக்கப் படையினர் ஈராக்கில் இப்போது அதிகம் பயன்படுத்துகின்றனர். இதற்கு 'பிரஸ்லேட்டர்' என்று பெயர்.

ஈராக்கியர்களுடன் உரையாடுவதற்கு அவர்களின் மொழி அமெரிக்கர்களுக்குத் தெரியாது என்பது பெரும் குறை. அந்தக் குறையை பெரும் அளவில் இந்த 'பிரஸ்லேட்டர்'கள் நிவர்த்திசெய்கின்றன.

30 மொழிகளில் இந்தக் கருவி மூலம் தொடர்புகொள்ளலாம். அமெரிக்கப் படையினர் ஈராக்கியர்களுக்கு சொல்ல வேண்டிய மிக அவசியமான சொற்களை இந்த 'பிரஸ்லேட்டர்' அராபிய மொழியில் மொழிபெயர்த்துக் கொடுக்கும். அல்லது கருவியில் இருக்கும் ஒரு விசையை அழுத்தினால் பேசும் சொல்லுக்கு இணையான மாற்று மொழிச் சொல் வரும்.

அதேபோன்று ஈராக்கியர்கள் பேசும் முக்கிய வார்த்தைகளை இந்தக் கருவி கிரகித்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும். இவ்வாறு ஒரு டஸின் சொற்களில் இருந்து 3ஆயிரத்து 500 வார்த்தைகள் வரை மொழிபெயர்க்கலாம்.

தண்ணீர் வேண்டுமா? மின்சார விநியோகம் வேண்டுமா? என்பது போன்ற கேள்விகளையும் இந்தக் கருவி மூலம் கேட்டுக்கொள்ளலாம்.

முதலில் இந்தக் கருவி மருத்துவ உபயோகத்துக்காக உருவாக்கப்பட்டது. ஆனால், இப்போது பொதுமக்கள் தொடர்புக்காக ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கப் படையினர் நூற்றுக்கணக்கில் இந்தக் கருவியைப் பயன்படுத்துகின்றார்கள்.



# இதுவும் செருப்புத்தான்

செருப்பு! அது என்ன காலில் போடும் சமாச்சாரம்தானே என்று நினைக்கிறீர்களா? லண்டனில் உள்ள செருப்பு ஒன்று பற்றி கேள்விப்பட்டால் நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். அதனைக் காலில் எல்லாம் போட்டுக் கொண்டு திரியமுடியாது. வேண்டுமானால் தலையில் தூக்கி வைத்துக்கொள்ளலாம். அப்படி அந்தச் செருப்பில் என்னதான் இருக்கிறது என்கிறீர்களா?

வைரம், பிளாட்டினம், செம்பவளம் போன்ற பெறுமதியானவற்றால் இழைக்கப்பட்டு அந்தச் செருப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் செருப்பு வடிவமைப்பாளரான சுடிரத் விட்ஸ்மென் இந்த அற்புதமான செருப்பை வடிவமைத்துள்ளார். தற்போது அது லண்டனில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி நம்மூர் மதிப்பில் சுமார் 15கோடி ரூபாவுக்கு மேல். இதனை விற்பதன் மூலம் கிடைக்கும் பணத்தில் 10 சதவீதம் லண்டனில் உள்ள அனாதைக் குழந்தைகள் இல்லத்துக்கு வழங்கப்படவுள்ளது.



இவ்வளவு பணம் கொடுத்து வாங்கும் செருப்பை யாராவது காலில் போடுவார்களா என்ன? அதுதான் புரியவே மாட்டேன் என்கிறது.

# அட! அப்படியா!!

தயாரிப்பு : கனிமொழி

## இனிக்கும் காதல் சிலை




உலகப் புகழ்பெற்ற காதல் சிலை வீனஸ். இங்கே படத்தில் இருப்பதும் அந்தச் சிலைதான். ஆனால், சிலை என்றதும் என்னவோ உலோகத்தால் அல்லது கற்களால் செய்யப்பட்டது என்று நினைத்து விடாதீர்கள். இந்தச் சிலையை நீங்கள் கடித்துத் தின்னலாம். ஆனால், இதனைச் செய்த ஜப்பானிய ஹோட்டல்காரர்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள்.

நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த வீனஸ் சிலை அனைவருக்கும் பிரியமான சொக்லேட்டுக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த சொக்லேட் வீனஸ் வீற்றிருக்கிறாள். ஹோட்டல் ஊழியரான டெய்சுகி என்பவரே இந்தச் சிலையைச் செய்துள்ளார். 6 அடி உயரமான இந்தச் சிலையைச் செய்வதற்கு 250 கிலோ சொக்கலேட் தேவைப்பட்டதாம். முழு வெள்ளை நிறச் சொக்கலேட்டாலேயே இந்தச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

## கத்தி விழுங்கிய நாய்





கத்தியை விழுங்கிவிட்டு அதனை மீண்டும் வெளியே எடுக்கும் சாகச நிகழ்ச்சிகள் நிகழ்த்திக் காட்டப்படுவதுண்டு. ஆனால், நாய்க்குட்டி ஒன்று கத்தியை விழுங்கிவிட அதனை எடுப்பதற்கு டாக்டர்கள் பட்டபாடு இப்போது செய்தியாகி விட்டது.

பிரிட்டனின் மெர்சீசைடு பகுதியைச் சேர்ந்தவர் ஜான்மால்லட். இவர் நாய்க் குட்டி ஒன்றை வளர்த்து வந்தார். ஒரு வயதே ஆன அந்த நாய்க் குட்டிக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது. உடனே ஜான்மால்லட் நாய்க்குட்டியை வைத்தியரிடம் எடுத்துக்கொண்டோடினார்.

அங்கு எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்ததில் நாய்க் குட்டி கத்தி ஒன்றை விழுங்கியுள்ளது கண்டறியப்பட்டது. கத்தியின் நீளமோ 7 அங்குலம். நாய்க் குட்டி குனியவும் முடியாமல் படுக்கவும் முடியாமல் நின்று கொண்டே இருந்தது. உடனே மருத்துவர்கள் சத்திர சிகிச்சை மூலம் அந்தக் கத்தியை வெளியே எடுத்தார்கள்.

தனது வயிற்றுப் பகுதி அளவுக்கு நீளமான கத்தியை விழுங்கிய நாய்க்குட்டி உயிர் பிழைத்தது மருத்துவர்களுக்கு ஏக ஆச்சரியம். ஜான்மால்லட்டின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இப்போது நாய்க்குட்டி ஆரோக்கியமாக உள்ளது.

## விளம்பரம்தான்



இப்போது பொருள்களை அறிமுகப்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் விளம்பரம் முக்கியம் என்றாகிவிட்டது. அதுவும் எல்லாப் பொருள்களுக்கும் விளம்பரங்கள் செய்யப்படுவதால் இப்போதெல்லாம் வித்தியாசமாக எதையாவது செய்தால்தான் மக்கள் கவரப்படுகிறார்கள்.

தாய்லாந்து நாட்டில் சமையல் காஸ் நிறுவனம் ஒன்று சிறிய ரக சிலிண்டர்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றை மக்களிடம் விளம்பரப்படுத்த புதிய உத்தி ஒன்றைக் கையாண்டது. மாடல் அழகிகளின் கைகளில் இந்த சிறிய காஸ் சிலிண்டர்களைக் கொடுத்து, அவர்களை வீதிகளில் வலம்வரவிட்டது அந்த நிறுவனம். படத்தில் உள்ளது அவர்கள் வீதியில் சிலிண்டர்களை இழுத்துச் செல்லும் காட்சி.

# குழந்தை வடிவமைப்பு


உங்களிடம் கற்பனைக் குதிரை இருக்கிறதா? இருந்தால் அதனை என் பின்னே தட்டி விடுங்கள்.

யாழ்நகரின் மத்தியில் மிகப் பிரமாண்டமான, குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய ஒரு வைத்தியசாலை. தெறகாசியாவிலேயே மிகப் பிரபலமானது. எதற்கு என்கிறீர்களா! நீங்கள் விரும்பும் வடிவத்தில் உங்கள் குழந்தையை அவர்கள் வடிவமைத்துத் தருவார்கள்.

இது என்ன உளறல் என்று நினைத்து விடாதீர்கள். இப்போது என்னுடன் அந்த வைத்தியசாலைக்குள் நுழையுங்கள். குழந்தை வடிவமைப்பில் நிபுணரான டாக்டரிடம் சென்று இப்படிச் சொல்லுங்கள். எனக்கு பொறியியலாளராகவோ அல்லது டாக்டராகவோ வரக்கூடிய புத்திசாலித்தனத்துடனும், மிக அழகான தோற்றத்தை உடையதாகவும் தேகாரோக்கியமும பலமும் உடையதாகவும் ஒரு குழந்தை வேண்டும்.



உடனேயே டாக்டர் உங்களுக்கு இப்படிப் பதில் அளிக்கிறார். அதெல்லாம் நீங்கள் கேட்டபடி உங்கள் திருப்திக்கேற்ப நாங்கள் உங்கள குழந்தையை வடிவமைத்துத் தருகின்றோம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களதும் உங்கள் மனைவியினதும் மரபணுத் தொகுதி வரைபடங்களை எடுத்துத் தருவதுதான். அதற்கு நீங்கள் ஒன்றும் சிரமப்படவேண்டியதில்லை. இந்த வைத்தியசாலையில் எனது அறையில் இருந்து மேற்கே சிறிது தூரம் சென்றதும் ஒரு விசாரணை அறை இருக்கும். அங்குள்ள அழகான பெண்ணிடம் வினவுங்கள் மரபணுத் தொகுதி வரைபடம் எடுக்கும் பிரிவுக்கு அவள் உங்களை அனுப்பி வைப்பாள். அவளும் நாங்கள் வடிவமைத்த பெண்தான். நீங்கள் வேண்டுமானால் மாதிரிக்கு அவளைப் பார்த்துக் கொள்ளுங்கள்.




அடடா! இத்தனை நேரம் குழப்பிய குழப்பத்தில் உங்கள் கற்பனைக் குதிரை தறிகெட்டு ஓடி உங்களை முழிக்க வைத்திருக்குமே.



பரவாயில்லை விழித்துக்கொள்ளுங்கள். இந்தக் கற்பனைக்கு அடிப்படையான நிஜம் பற்றிக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளலாம்.

ரி.அன்ரன்
வி.ஜெயராஜ்

அண்மையில் விஞ்ஞானிகள் மிகப் பெரியதொரு சாதனையை நிகழ்த்தியுள்ளனர். மனிதன் அணுவைப் பிளந்த சாதனை, மனிதன் நிலவில் காலடி எடுத்து வைத்த சாதனை என்பவற்றுக்கு இணையாக இந்தச் சாதனையும் கருதப்படுகின்றது.

மனிதனின் முழு உடலமைப்பும் மரபணுக்களாலேயே கட்டியெழுப்பப் பட்டுள்ளன. அந்த மரபணுக்கள் பற்றிய முழுமையான வரைபடத்தை (Genome) விஞ்ஞானிகள் இப்போது தயாரித்து முடித்துள்ளார்கள்.

மரபணுவில் உள்ளதான டி.என்.ஏ பற்றிய முதல் தகவல் வெளியிடப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த நிலையில் மரபணுக்களின் முழுப்பிரதியை தயாரித்த சாதனையை விஞ்ஞானிகள் நிகழ்த்தியுள்ளனர்.

2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் அளவில் மனிதனின் மரபணு வரைபடத்தில் 85 வீதமானது தயாரிக்கப்பட்டுவிட்டது. அப்போது அதனை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர். ஆனால், இப்போது வெளியிடப்



(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாய் வாசி ஒருவர் வவுனியாவில் தடுப்பு

தென்மராட்சி,ஏப்.30

பணம், நகை ஆகியவற்றுடன் கொழும்பிலிருந்து வந்த கச்சாய் வாசி ஒருவர் வவுனியா புகையிரத நிலையத்தில் பொலீஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தடுத்து வைக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புகையிரதத்திலிருந்து இறங்கிய இவரை பரிசோதனை செய்த பொலீஸார் 71ஆயிரத்து 300ரூபா பணமும் 27பவுண் நிறையுடைய தங்க ஆபரணங்களும் அவரிடம் இருந்ததைக் கண்டு அவரைத் தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## மேதின திருப்பலி

நாளை யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ள காலைத் திருப்பலி தொழிலாளர் தினத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

திருப்பலி நிறைவடைந்ததும் தொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள் ஆசிர்வதிக்கப்படும் என யாழ்.மரியன்னை பேராலயப் பங்குத் தந்தை அருட்திரு. மைக்கல் சௌந்தரநாயகம் அடிகள் அறிவித்துள்ளார். (ஒ-51)

# குழந்தை வடிவ....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள மரபணு வரைபடமே 100 வீதம் மிகச் சரியானது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

குடும்பத்தின் குண இயல்புகளைச் சுமந்து வரும் இந்த மரபணுவின் பிரதியை தயாரித்து இருப்பது, உயிரியல் விஞ்ஞானத்தில் கற்பனை கூடச் செய்து பார்த்திருக்க முடியாதது என்று அமெரிக்க அறிவியல் துறை விஞ்ஞானி அரிஸ்டைட்ஸ் பேட்ரினாஸ் ஆச்சரியத்துடன் கூறியிருக்கிறார்.

மரபணுவில் உள்ள டி.என்.ஏயின் 30கோடி குணாதிசயங்களை வரிசைப் படுத்தி விஞ்ஞானிகள் மரபணுப் பிரதியை உருவாக்கியுள்ளார்கள்.

எல்லா மரபணுக்களின் பின்னும் 4 வகையான இரசாயனப் பொருள்கள் அடங்கியுள்ளன. அடனைன் (adenene - A), தைமைன் (thymine - T), கைரோசின் (cytosine - C), கயனைன் (guanine - G) ஆகிய பொருள்களே மரபணுவில் அடங்கியுள்ளன. இதில் அடநைன் மற்றும் தைமைன் ஒரு சோடியாகவும் கைரொசைன் மற்றும் கயனைன் என்பன மற்றொரு சோடியாகவும் இணைந்து செயற்படுகின்றன. இவ்வாறான அடிப்படை சோடிகள் மனித மரபணுத் தொகுதியில் 28 கோடியில் இருந்து 35 கோடி வரையில் இருக்கின்றன.

இத்தகைய சோடிகள் ஏணியைப் போன்ற ஓர் அமைப்பில் தொடர்கின்றன. இந்தத் தொடரிலேயே மனித உயிரின் அடிப்படை அமைந்துள்ளது. ஒவ்வோர் உயரிக் கலமும் 6 அடி நீளமான (2மீற்றர்) நீளமான டி.என்.ஏயைக் கொண்டுள்ளது.

மனிதனின் மரபணுத் தொட ரில் 3 வீதமானவையே தேவை யான மரபணுக்களைக் கொண் டுள்ளன. ஏனைய மிகுதிப் பகுதி அர்த்தம் அற்ற மரபணுக்களால் ஆக்கப்பட்டுள்ளது. தொகுதியின் பெரும்பாலான இடத்தை இவையே ஆக்கிரமித்துள்ளன.

மரபணுத் தொகுதியில் உள்ள மரபணுக்களின் சரியான எண்ணிக்கை இதுவரை தெரியவரவில்லை. இருந்தாலும் 30 ஆயிரம் முதல் 1 லட்சதது 20 ஆயிரம் வரை உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

மரபணுத் தொகுதி தொடர்பான இந்த அரிய கண்டுபிடிப்பு மருத்துவ உலகத்துக்கு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

அதெல்லாம் சரிதான்! இதனால் என்ன பயன் என்கிறீர்களா?

விஞ்ஞானிகள் கூறுபவற்றைக் கேட்டால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவரவருக்குரிய மரபணுத் தொகுதியை வரைந்துவிட்டால் சிரமங்கள் எல்லாம் குறைந்துவிடும். அந்த மரபணு வரைபடத்தைக் கொண்டு அவருக்கு ஏற்ற - பக்க விளைவுகள் இல்லாத மருந்துகளையும் மருத்துவ ஆலோசனைகளையும் வழங்க முடியும்.

ஒரு தனிமனிதனுக்கு ஏற்றவாறு மருந்துகளையும் உணவுகளையும் அவரின் மரபணுத் தொகுதியில் கண்டறிந்த உண்மைகளில் இருந்து தீர்மானிக்க முடியும் என்பது மிகச் சிறப்பானது என்கிறார்கள் மருத்துவர்கள்.

இந்த வகையில் பொதுவான நோய்த் தாக்கங்களுக்கான மரபணு மாற்றங்கள் கண்டறியப்பட்டு அவற்றுக்கான சுமார் 350க்கும் மேற்பட்ட மருந்துகள் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால், அவை இன்னும் விற்பனைக்கு வரவில்லை. மிக விரைவில் அவை சந்தைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்க்கரை வியாதி எனப்படும் நீரிழிவு நோய் உலகில் அதிகளவில் மககளை துன்பப்படுத்தி வருகின்றது. யாழ்ப்பாணத்திலும் அதன் தாக்கம் அதிகம் என்கின்றன மருத்துவ வட்டாரங்கள். இந்த நோய் பரம்பரை பரம்பரையாகவும் தொடரும் தன்மை உடையது. இதனால், நீரிழிவு நோய் வந்த ஒருவர் மட்டுமல்ல அவரது சந்ததியும் அந்தத் துன்பத்தை அனுபவிக்க வேண்டிவருகின்றது.

இதற்கு நீரிழிவு நோய் தாக்கப்பட்ட ஒருவரின் மரபணுவில் ஏற்பட்ட சிக்கல்கள் சந்ததிகளுக்கும் தொடர்வதே காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே பிரச்சினைக்குரியவின் மரபணுத் தொகுதியை வரைந்து, அதனை மாற்றி அமைப்பதன் மூலம் அந்த நோய்யைக் குணமாக்குவதற்கு வேண்டிய மருத்துவத்தைச் செய்துகொள்ளலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

அது தவிர, நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவரின் பரம்பரை அலகுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் அவரது சந்ததிக்கு அந்த நோய் தொடராது தடுக்க முடியும். இது மனித குலத்துக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

மருத்துவத்தில் மட்டும் என்றல்ல வேறுபல விடயங்களிலும் இந்த மரபணுத் தொகுதி பயன் உள்ளதாக அமையப் போகின்றது. ஏற்கனவே சிலரை அடையாளம் காண்பதற்கு இந்த மரபணுச் சோதனைகள் நடத்தப்படுவது தெரிந்ததே.

செம்மணியில் கொலையுண்டவர்களை அடையாளப் படுத்துவதற்காக அங்கு மீட்கப்பட்ட எச்சங்கள் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என்பதும் தெரிந்ததே.

இதேபோன்றே -

கொலை ஒன்று இடம்பெற்றால் அங்கு கிடைக்கும் தடயங்களை மட்டும் வைத்துக்கொண்டு கொலையாளியை இனங்காண்பது பலசமயங்களில் முடியாத காரியமாகப் போய் விடுகின்றது. ஆனால், மரபணுச் சோதனையும் மரபணுத் தொகுதி வரைபடமும் இந்த விடயத்தில் காவல் துறையினருக்கு அதிகம் கைகொடுக்கின்றது.

மேற்கு நாடுகளில் இந்த முறையைப் பயன்படுத்தி பல தசாப்தங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைகளின் சூத்திரதாரிகளைக்கூட இப்போது கைதுசெய்து வருகின்றார்கள்.

இதனைவிடவும் பயனுள்ள விடயமும் ஒன்றுள்ளது. ஆனால், அதனைச் செய்வதற்கு சுற்றுச் சூழலியலாளர்களும் மதவாதிகளும் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன.

இப்போது, ஆரோக்கியமான மனிதர்களே சமூகத்திற்குத் தேவைப்படுகின்றனர். உடல்நலம், மனநலம் குன்றியவர்கள் சமூகத்தால் புறக்கணிக்கப்படுவதே பெரும்பாலும் நடந்துவருகின்றதைக் காண்கிறோம். எதிர்காலத்தில் இத்தகைய நிலை தோன்றாமல் தடுக்க மரபணு தொகுதிக் கண்டுபிடிப்பு பெரும் பங்காற்றும்.

அதாவது சமூகத்துக்குத் தேவையான புதிசாலித்தனமான ஆரோக்கியமான, பலம்கொண்ட ஒரு தலைமுறையை மரபணு மாற்றத்தின் மூலம் உருவாக்க முடியும் என்கிறது மருத்துவ உலகம். இதன் மூலம் தேர்ந்தெடுத்த ஒரு சமூகத்தை உருவாக்க முடியும்.

தற்போது உணவுத் தேவைக்காக தாவரங்கள் மற்றும் விலங்குகளில் மரபணு மாற்றங்களைச் செய்து உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதைப் போன்று ஆரோக்கியமான மனிதர்களையும் பெருக்கிக்கொள்ள முடியும்.

ஆனால், இது இயற்கைக்கு மாறானது; இறைவனின் நியதிக்கு மாறானது என்று மதவாதிகளும் சுற்றுச் சூழலியலாளர்களும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பூமியில் இருந்து மறைந்துவிட்ட மிருங்கங்கள் பறவைகள் என்பவற்றையும் இந்த மரபணுக்கள் மூலம் மீண்டும் உற்பத்தி செய்ய முடியும். இதன் கற்பனை வடிவமே வெளியான போது பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 'யூரைஸிக் பார்க்' என்ற ஆங்கிலப்படம். அந்தக் கற்பனை இப்போது நிஜமாகும் எல்லையை எட்டிவிட்டது என்பதே உண்மை.

இருந்தாலும், இந்த மரபணு மாற்றங்கள் மதவாதிகளுக்கே பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. கடவுளையும் அவனைச் சுற்றியுள்ள வற்றையும் இறைவனே படைத்தான் என்ற அவர்களின் கூற்று இந்த மரபணு மாற்ற செயற்பாடுகள் மூலம் அடிபட்டுப் போய்விடும். இங்கு தனககு வேண்டிய - விரும்பிய - வடிவத்தில் மனிதனையோ தாவரத்தையோ மிருகத்தையோ மனிதன் தானே உற்பத்தி செய்துகொள்ளும் திறனைப் பெற்று விடுகின்றான்.

எது எப்படியிருந்தாலும் மரபணுத் தொகுதி கண்டுபிடிப்பு மனித குலத்துக்கு பல வழிகளிலும் நன்மையையே ஏற்படுத்தும் என்று மருத்துவர்கள் பொதுவாகக் கூறப்படுகின்றது.

இப்போது நீங்கள் மீண்டும் மேலே கூறப்பட்ட கற்பனையை மீட்டுப் பாருங்கள். அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்பது புரியும்.

ஆமாம்! குடாநாட்டில் இப்படி எல்லாப் பெற்றோருமே மருத்துவர் குழந்தை வேண்டும் பொறியியலாளர் குழந்தை வேண்டும் என்று பெற்றுக்கொண்டால் மற்ற வேலைகளை எல்லாம் யார் பார்ப்பார்கள். ★

# ஆனையிறவை மீட்டுவிட்டு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த பரந்துபட்ட பகுதி எதிரிக்கே மிகவும் சாதகமானது. ஆனையிறவை அண்டிய பகுதி வெட்டவெளியாகவும் உப்புக்கடல் நீரேரியாகவுமே உள்ளது. இந்த முகாம் எதிரிக்கு மிகவும் சாதகமாக இருந்தபோதும், முகாமை ஏற்கனவே எமது அணிகள் தாக்கிய அனுபவம், அதில் கற்றுக்கொண்ட பாடங்கள், அத்தாக்குதலை வெற்றிகரமாக முடிக்க உதவியாக இருந்தன.

ஆனையிறவுப் படைத்தளத்தை வெற்றிகொண்டு பெருவிழா எடுத்து இருக்கின்றோம். எமது முழுப்பகுதியையும் எதிரியிடம் இருந்து நாம் கைப்பற்றவேண்டும். அது இன்றைய தலைமுறையின் காலத்திலேயே அது நடக்கவேண்டும். அடுத்த வருங்கால சந்ததிக்கு அந்தச் சுமையை நாங்கள் சுமத்தாமல் இருக்கவேண்டுமாயின், ஒன்றை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். நாம் அனைவரும் தலைவரின் கைகளைப் பலப்படுத்த வேண்டும். இந்தப்பலந்தான் இன்றைய சமாதான சூழல் உருவாவதற்குக் காரணமாக இருந்தது.

இந்தப் பலத்தின் மூலந்தான் இன்று எதிரி எங்களுடன் பேச்சுக்கு இணங்கியுள்ளான்.

யாழ்.குடாநாட்டை விட்டு நாம் பின்வாங்கி வன்னிக்குச் சென்ற சமயம் எதிரியின் திட்டம் புலிகளை வன்னிப் பகுதியில் வைத்து நசுக்கி விடுவதுதான். மிக இலகுவாக நசுக்கி விடலாம் என்று எதிரி நினைத்தான்.

அதனபின் தலைவரின் திட்டப்படி 'ஓயாத அலைகள ஒன்று' நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்பின், ஓயாத அலைகள் 2,3 எனத் தொடர்ந்தன. அதன் மூலம் தமிழர் தாயகத்தின் பெரும் பகுதியை மீட்டுள்ளோம்.

இந்த வெற்றிகளுக்கெல்லாம் காரணமாக இருந்த போராளிகளின் தியாகங்களை மறக்கக்கூடாது. தலைவரின் கரங்களைப் பலப்படுத்தி தலைவரைப் பலம்பெறச் செய்ய வேண்டும். இந்தப் பலந்தான் இன்று சர்வதேச அரங்கில் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளது. ஆகவே, நாம் பலத்துடன் தொடர்ந்து இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் எமது பிரச்சினைக்கு ஒரு சிறப்பான தீர்வு வரும் - என்றார். (ஒ-3)

## தங்கள் குற்றத்தை மூடிமறைக்க

# கிராம அலுவலர்கள் மீது வீணாக அதிகாரிகள் குறை கூறக்கூடாது!

## சம்மேளனம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.30

தமது குறைகளை மறைப்பதற்கு அரசு அதிகாரிகள் கிராம அலுவலர்கள் மது குற்றஞ்சுமத்தக் கூடாது.

வடக்கு - கிழக்கு தமிழ் பேசும கிராம உத்தியோகத்தர்கள் சமமேளனத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிலையான ஒரு சமூக நிலையை ஏற்படுத்துவதற்கும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் கிராம உத்தியோகத்தர்களாகிய நாம பாடுபடுவதுடன் மறுக்கப்படும் எமது உரிமைக்காகவும் கௌரவத்திற்காகவும் குரல் கொடுப்போம்.

அரசின் கொள்கைத் திட்டங்களை கிராம மட்டத்தில் கொண்டு செல்லும் ஒரே உத்தியோகத்தர்களான நாம் மக்களின் அபிலாசைகள், உணர்வுகளை நன்கு புரிந்து கொண்ட வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவர்கள் வரவேற்கிறார்கள்.

எமது சம்பள உயர்வு, பதவி உயர்வு என்பன பற்றி அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. உடன் அதனை நிறைவேற்றுமாறு வலியுறுத்தவும் -

வடக்கு - கிழக்கில் உள்ள சில அரச அதிகாரிகள் எமது சேவையினை அவமானப்படுத்தும் விதத்தில் செயற்படுவதுடன் தங்கள் குறைகளை மறைப்பதற்காக சில நிறுவனங்களுடன் இணைந்து எம்மீது குற்றம் சுமத்துவதை நிறுத்தவும்.-

கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை எல்லை நிர்ணயம் செய்யாது பதில் கடமை வேதனத்தை நிறுத்தியது பற்றி மாவட்ட மட்டத்தில் நடைபெறும் கூட்டு மேதினத்தில் குரல கொடுக்கவும் - எமது சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்றுள்ளது. (ஒ-10)

# வடமராட்சி மினிபஸ் சங்கம் அடையாள அட்டை விநியோகம்

கரவெட்டி,ஏப்.30

வடமராட்சி சிற்றூர்திகள் சங்கத்தினர் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் அடுத்த மாதம் முதல் சிற்றூர்திச் சங்க அடையாள அட்டைகளை வழங்கவுள்ளனர்.

அண்மையில் மினிபஸ் சேவையில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வடமராட்சிச் சிற்றூர்திச் சங்கத்தினர் வழங்கும் இந்த அடையாள அட்டைகளை பிரயாணிகளின் பார்வைக்குத் தெரியக்கூடியதாக மேற்சட்டையில் தொங்கவிட்ட வண்ணம் சாரதிகளும நடத்துநர்களும் கடமையாற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சாரதிகள், நடத்துநர் போன்றோர் மதுபோதையிலோ புகைத்தபடியோ கடமையில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் -

கடமை நேரம் மது அல்லது சிகரெட் பாவிப்பது கண்டு பிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவரை வேலை நீக்கம் செய்வதுடன் தண்டப் பணமும் அறவிடப்படும் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-70)

# கண்ணீர் அஞ்சலி



29.04.2003 அன்று

**இராசரத்தினம் வரதராஜன்**

**அவர்கள் ஜேர்மனியில் அகால மரணமானார். அன்னாரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கின்ற அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடுகண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

*74/9, இராமநாதன் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*

சி.பாலசிங்கம்
மாமா குடும்பத்தினர்.

(17373)

# மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம் வரதராஜன்

கொக்குவில் கிழக்கு, காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மன் பிராங்போட்டை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் வரதராஜன் அவர்கள் நேற்று (29.04.2003) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராசரத்தினம் - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், வசந்தராஜன் (டென்மார்க்), மோகனராஜா (ஜேர்மன்), உதயஷாந்தி, சுகந்தி (ஜேர்மன்), ஜெயந்தி (ஜேர்மன்), தமயந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் கிழக்கு,*
*காளிகோவிலடி, கொக்குவில்.* (17374)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ஆறுமுகம் கனகம்மா

காரைநகர் களபூமி விளானைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் கனகம்மா வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான முருகேசு இலட்சுமிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான முருகேசு சின்னக்குட்டியின் அன்பு மருமகளும் காலஞ் சென்றவர்களான இரத்தினசிங்கம், தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதியாபரணம், குசலகுமாரி, சிவலிங்கம், புஸ்பம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமச்சந்திரன், இராஜதேவி, திருமகள், சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா பூங்கா வீதி இல்லத்தில் இன்று 30.04.2003 புதன்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூங்கா வீதி,*
*வவுனியா.* (17379)

தகவல்:
செ.மதியாபரணம், செ.சிவலிங்கம்
(மகன்மார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org